مركز أصول
Osoul Center
www.osoulcenter.com
Rabwah

# உமது நேசர் நபி ﷺ அவர்களுடன் ஒரு நாள்



ஆக்கம்: அபூ காலித் அய்மன் பின் அப்துல் அஸீஸ் அபான்மீ

மீள்பரிசீலனை:
கலாநிதி அப்துல் கரீம் பின் அப்துல்லாஹ் அல்குழைர்

# يوم مع حبيبك صلى الله عليه وسلم


تاليف

**أبو خالد أيمن بن عبدالعزيز أبانمي**

راجعه فضيلة الشيخ

**د. عبدالكريم بن عبدالله الخضير**

ترجمة

**محمد رزمي محمد جنيد**

مراجعة

أحمد محمد


Tamil
தமிழ்
تاميلي

ⓒ جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة ، ١٤٤٤هـ

**فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر**

أبانمي ، أيمن بن عبدالعزيز بن عبدالمحسن

يوم مع حبيبك صلى الله عليه وسلم - التاميلية. / أيمن بن عبدالعزيز بن عبدالمحسن أبانمي -

ط١ - الرياض، ١٤٤٤هـ

٨٤ ص، ١٢ سم x ١٦,٥ سم

ردمك : ٩٧٨-٦٠٣-٨٣٨٢-٥٧-٨

١- السرة النبوية	أ.العنوان

**ديوي ٢٣٩	١٤٤٤/٦١٨٣**

**رقم الايداع: ١٤٤٤/٦١٨٣**

**ردمك : ٩٧٨-٦٠٣-٨٣٨٢-٥٧-٨**

OsoulCenter
www.osoulcenter.com

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்படும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

+966 11 445 4900

+966 11 497 0126

P.O.BOX 29465 Riyadh 11457

osoul@rabwah.sa

www.osoulcenter.com

بسم الله الرحمن الرحيم

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற*
*அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின்*
*பெயரால்...*



| | |
|---|---|
| நபியவர்களின் தோற்றம் | 17 |
| தூக்கத்திலிருந்து விழித்தல், வுழூச் செய்தல், இரவுத் தொழுகை என்பவற்றில் நபியவர்களின் வழிமுறை | 21 |
| தொழுகையில் நபிவழி | 29 |
| காலை, மாலை ஓத வேண்டிய திக்ருகளில் நபிவழி | 49 |
| உண்ணல், பருகலில் நபிவழி | 59 |
| உடை, நடை, பிரயாணத்தில் நபிவழி | 63 |
| நபியவர்களின் நற்பண்புகள், மக்களுடன் நடந்து கொள்ளும் முறை | 67 |
| நபியவர்களின் வீட்டு வாழ்க்கையும் உறக்க முறையும் | 73 |

# உமது நேசர் நபி ﷺ அவர்களுடன் ஒரு நாள்

*தன்னை நேசிக்கும் வழியை தனது தோழர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதுடன் தொடர்புபடுத்தி வைத்துள்ள அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ''நீங்கள் அல்லாஹ்வை விரும்பினால் என்னைப் பின்பற்றுங்கள்! அல்லாஹ் உங்களை விரும்புவான். உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன்'' என்று (நபியே!) நீர் கூறுவீராக! (ஆல இம்ரான்: 31). (தனது தோழரின் நேசத்தை விட) பிற படைப்பினங்களின் மீதான நேசத்தை முற்படுத்தியோரின் இறைநம்பிக்கை முழுமை பெறாததாக ஆக்கியுள்ளான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தை, அவரின் குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக அன்பானவராகும் வரை அவர் (உண்மையான) இறைநம்பிக்கையாளராக மாட்டார்'.*

*தேர்ந்தெடுக்கப்பட்ட வழிகாட்டி, பிரகாசிக்கும் ஒளிவிளக்கு, நற்செய்தி கூறும் அழைப்பாளர்,*

அருட்கொடையாக வழங்கப்பட்ட கருணையாளர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது இரவு, பகல் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் காலமெல்லாம் பரிபூரணமான சாந்தியும் சமாதானமும் நிலவட்டுமாக!. அல்லாஹ்வை நினைவுகூரும் நன்மக்கள் அவனை நினைவுகூரும் காலமெல்லாம் அன்னார் மீது சாந்தியும் சமாதானமும் நிலவட்டுமாக. மழைத்துளிகள், இலைகள், மணல், கற்களின் எண்ணிக்கையளவு அன்னாரின் மீதும், அன்னாரின் தூய குடும்பத்தார், முஹாஜிரீன்கள், அன்ஸாரிகள், மறுமை வரை அவர்களை அழகான முறையில் பின்பற்றும் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் என்றென்றென்றும் நிலவட்டுமாக!.

உண்மையான முஸ்லிம் தனது நண்பர் முஹம்மத் (ஸல்) அவர்களைக் காணும் ஆசையில்தான் இருப்பான். தன்னிடமுள்ள அனைத்தையும் செலவழித்தாயினும் அன்னாரின் தோழர்களில் ஒருவனாக இருந்து, கண்ணியமிக்க அந்த முகத்தின் ஒளியால் தன் கண்களை நிரப்பி, இனிமையான பேச்சைக் கேட்டு, உள்ளத்தை வசீகரிக்கும் அன்னாரின் நற்பண்புகளைப் பார்த்து, அவர் தனது இறைவனை வணங்கும் முறையையும் அறிந்து கொள்ளத் துடிப்பான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘என் சமுதாயத்தாரில் என்னை ஆழமாக நேசிப்போரில் சிலர் எனக்குப்பின் தோன்றுவார்கள். அவர்களில் ஒருவர் என்னைப் பார்க்க வேண்டுமே என்பதற்காகத் தம் குடும்பத்தாரையும் செல்வத்தையும் கூடத் தியாகம்

செய்ய விரும்புவார்'. இதனால்தான் தாபிஈன்களின் நிலை நபியை நேசிப்பதில் அந்தளவுக்கிருந்தது:

'அனஸ் (ரலி) அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற நபியவர்களின் முடியொன்று எம்மிடமுள்ளது' என இப்னு ஸீரீன் (ரஹ்) அவர்கள் அபீதா பின் அம்ரு (ரஹ்) அவர்களிடம் கூறிய போது: 'அன்னாருடைய ஒரு முடியாவது என்னிடமிருப்பது இவ்வுலகம், அதிலுள்ள அனைத்தையும் விட சிறந்தது' என அபீதா (ரஹ்) கூறினார்கள்.

இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது இமாம் தஹபீ அவர்கள்: 'நபியவர்களுக்கு ஐம்பது வருடங்களுக்குப் பின்னால் இந்த இமாம் இவ்வாறு கூறுகின்றார் எனில் எமது காலத்தில் உறுதியான அறிவிப்பாளர் தொடருடன் அன்னாரின் முடியொன்று கிடைத்தால் நாங்கள் என்ன கூறுவோம்?' என்று கூறியுள்ளார்கள். ஆனால் அதனை உறுதிப்படுத்துவதுதான் சாத்தியமற்ற ஒன்றாகிவிட்டது. இமாம் தஹபீ மேலும் கூறினார்கள் : 'நபி(ஸல்) அவர்கள்தனது தலைமுடியை சிரைத்த போது அதன் மூலம் அம்மக்களை கௌரவிப்பதற்க்காக தனது தோழர்களுக்கு மத்தியில் அதனைப் பகிரந்தளித்ததாக உறுதியான செய்திகள் உள்ளன அன்னாருடைய ஒரு முடித்துண்டையாவது முத்திமிடக் கிடைக்காதது எவ்வளவு கைசேதமாகும்'.

ஜுபைர் பின் நுபைல் (ரஹ்) கூறுகின்றார்: நாங்கள் மிக்தாத் பின் அஸ்வத் (ரலி) அவர்களிடம்

அமர்ந்திருந்தோம். அப்போது அவ்வழியாகச் சென்ற ஒரு மனிதர்: 'நபியவர்களைக் கண்ட இக்கண்கள் இரண்டிற்கும் சுபசோபனம் உண்டாகட்டும். நீங்கள் கண்டது போல் நாமும் காணவும், நீங்கள் பார்த்தது போல் நாமும் பார்க்கவும் எவ்வளவு ஆவலாக உள்ளோம்' என்று கூறினார்.

ஸாபித் அல்புனானி (ரஹ்) நபியவர்களின் பணியாள் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களைக் கண்டால் அவர்களை நோக்கிச் சென்று 'நபியுடைய கையைத் தொட்ட கை இது' எனக் கூறி அவர்களின் கையை முத்தமிடுவார்கள். அதேபோன்று யஹ்யா பின் ஹாரிஸ் (ரஹ்) வாஸிலா பின் அஸ்கஃ (ரலி) அவர்களுடனும், மற்றும் சில தாபிஈன்கள் ஸலமத் பின் அக்வஃ (ரலி) அவர்களுடனும் இவ்வாறு நடந்து கொண்டு, கைகளை முத்தமிடுவார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு மரக்குற்றியின் மீதேறி உரை நிகழ்த்துவார்கள். பிற்காலத்தில் அதனை விட்டு வேறு மின்பர் ஒன்றை எடுத்துக் கொண்டார்கள். கர்ப்பிணி ஒட்டகம்பிரசவ நேரத்தில் முனங்குவதைப் போன்று அக்குற்றி முனங்கியதைப் பள்ளியினுள் வீற்றிருந்த அனைவரும் செவிமடுத்தனர். நபியவர்கள் அதற்கருகில் வந்து அதன் மீது தனது கையை வைத்ததும் அதன் முனுகல் ஓய்ந்தது. இமாம் ஹஸனுல் பஸரீ (ரஹ்) அவர்கள் இச்சம்பவத்தைக் கூறும்போது: 'முஸ்லிம்களே ஒரு மரக்குற்றியே நபி (ஸல்) அவர்களை சந்திக்க இந்தளவு அவாக் கொள்ளும்போது

நீங்கள்தான் அதைவிட அவாக் கொள்ள மிக அருகதையுடையவர்கள்' என்று கூறுவார்கள்.

நபியவர்களை நேசித்து, அவர்களைக் காணும் ஆவலில் மாத்திரம்அவர்கள்நின்றுவிடவில்லை.மாறாகஅதையும் தாண்டி அன்னாரிடமிருந்து தமக்குத் தவறியவற்றை அடையும் முனைப்பாக அன்னாரின் வழிமுறைகளை அமுல் படுத்தவும், பின்பற்றவும் செய்தார்கள். மூத்த தாபிஈன்களில் ஒருவரான அபூமுஸ்லிம் அல்கவ்லானீ (ரஹ்) தனது ஆவலைப் பின்வருமாறு வெளிப் படுத்துகின்றார்: 'நபி (ஸல்) அவர்கள் தமக்கு மட்டும்தான் என நபித்தோழர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்களா? அல்லாஹ்வின் மீதாணையாக! 'நமக்குப் பின்னால் சிறந்த மனிதர்களைத்தான் நாம் விட்டுச் சென்றுள்ளோம்' என அவர்கள் அறியும் வரை நபி(யை நேசித்து, பின்பற்றும்) விடயத்தில்அவர்களுடன் போட்டியிடுவோம்' என்றார். நபித்தோழர்கள் மாத்திரம் நபியவர்களைக் கொண்டாடுவதை அபூ முஸ்லிம் (ரஹ்) ஏற்கவில்லை. அன்னாரை நேசிப்பதில் அவர்களுடன் போட்டி போடவே முனைந்தார்கள். ஆரோக்கியமான போட்டியின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்திருந்தார்கள். வணக்க வழிபாடுகளில் விட்டுக்கொடுப்பில்லை, சிறப்பு, பண்புகளை வைத்துத் தான் முந்திக் கொள்ளல் உண்டு, நற்செயல்களில் பின்தங்கியவரை குடும்பப் பின்னனி துரிதப்படுத்தி இழுத்துச் செல்லமாட்டாது என்பதையும் புரிந்து வைத்திருந்தார். மேலும் அம்மக்கள் கூறுவார்கள்: 'உலக

விடயத்தில் ஒருவர் உன்னுடன் போட்டியிட வந்தால் நீ அவனுடன் மறுமை விடயத்தில் போட்டியிடு, அல்லாஹ்விடம் நெருங்குவதில் உன்னை யாரும் முந்தவிடாமல் செய்யமுடியும் என்றால் அதனைச் செய்' என்று கூறுவார்கள்.

பின்னர் வந்த ஸலப் அறிஞர்கள் கூட தமது சிறிய, பெரிய அனைத்து செயற்பாடுகளிலும் நபியவர்களைப் பின்பற்றுவதில் அக்கறையுடன் இருந்தார்கள். இமாம் அஹ்மத் (ரஹ்) கூறுகின்றார்: 'நான் நபியவர்களுடைய எந்தச் செய்தியையும் அமுல் படுத்தாமல் அதை எழுதியதில்லை. எந்தளவுக்கெனில், அபூதைபா என்பவர் நபியவர்களுக்கு இரத்தம் குத்தி எடுக்கும் சிகிச்சை முறை (ஹிஜாமத்) செய்து விட்டதற்காக அவருக்கு நபியவர்கள் ஒரு தங்கக்காசு கொடுத்ததாகக் காணக்கிடைத்தது. நானும் அத்தொழில் செய்யும் ஒருவர் எனக்கு ஹிஜாமத் செய்துவிட்டதற்காக ஒரு தங்கக் காசு கொடுத்தேன்'. மேலும் 'தலைசொறிவதற்கு கூட ஒரு நபிமொழியைத் தேடிக்கொள்ள முடியுமென்றால் அதனையும் செய்து கொள்' என இமாமவர்கள் கூறுவார்கள். இவையெல்லாம் அனைத்து விடயங்களிலும் நபியவர்கள் மனிதரில் பூரணமானவர்கள் என்பதற்காகத்தான்.

இமாம் நவவீ (ரஹ்) கூறினார்கள்: 'நீ நபியவர்களின் தோற்ற அமைப்பைப் பார்த்தால் அதற்குப் பின்னால் அழகே இல்லை (எனும் அளவிற்கு அழகாக இருப்பார்கள்). அன்னாரின் நற்குணங்களைப் பார்த்தால் அதற்குப் பின் பூரணமான குணமே கிடையாது. பொதுவாக

அனைத்து மக்களுக்கும், குறிப்பாக முஸ்லிம்களுக்கும் அவர் செய்யும் உபகாரத்தையும், நன்கொடையையும் பார்த்தால் அதற்குப் பின் வேறு பரோபகாரமே கிடையாது'. ஓர் அடியானுக்கு நபியவர்களை நேசிக்கும் பாக்கியம் கிடைப்பதே அல்லாஹ் அவனுக்கு வழங்கும் மிகப்பெரிய அருட்கொடையாகும். இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகின்றார்கள்: 'ஓர் அடியான் எண்ணங்கள், ஊசலாட்டங்கள் அனைத்திலும் அல்லாஹ்வை நாடுகின்றான் என்பதில் உண்மையாக இருந்தால் அவனுக்கு நபியவர்களை நேசிக்கும் பாக்கியம் கிடைக்கின்றது. அவரைப் பற்றிய உயிரோட்டமான நேசம் இவனது உள்ளத்தை ஆட்கொண்டு விடுகின்றது. எனவே அல்லாஹ் அன்னாரைத் தனது நபியாகவும், தூதராகவும், அவன்பால் வழிகாட்டுபவராகவும் ஆக்கியதைப் போல், இவன் அன்னாரைத் தனது வழிகாட்டியாக, ஆசானாக, முன்மாதிரியாக ஆக்கிக் கொள்வான். எனவே அன்னாருடைய வரலாற்றையும், ஆரம்ப நிலையையும், இறைச்செய்தி இறங்கிய விதத்தையும் தேடிப் படிப்பான். அவருடைய பண்புகள், நற்குணங்கள், அன்னாருடைய மௌனம் அசைவுகள், உறக்கம் விழிப்பு, வணக்கம், குடும்பத்தினர் தோழர்களுடன் நடந்து கொள்ளும் முறை அனைத்திலும் அன்னாரது ஒழுக்க விழுமியங்கள் அனைத்தையும் அறிந்து தானும் நபித்தோழர்களில் ஒருவரைப் போன்று மாறிவிடுகின்றான்'. (மதாரிஜுஸ் ஸாலிகீன் 3/268).

(நூலாசிரியர் கூறுகின்றார்) நான் கூறுகின்றேன்: நபியுடன்

கூட இருக்கத் தவறியவர்களுக்கு அன்னாருடைய வழிமுறைகளுடன் கூட இருக்கத் தவற வேண்டாம்.

உமது நண்பர்(ஸல்) அவர்களுடன் ஒரு நாள் நீர் வாழ்வது எவ்வளவு அழகானது!. அந்நாளில் அவர்களுடைய சொல், செயல் அனைத்திலும் அன்னாரைப் பின்பற்றி, சகல விடயங்களிலும் அன்னாருடைய வழிமுறையைப் பின்துயர்ந்து, அதனால் உம்மை ஆட்கொள்ளவிருக்கும் சந்தோசத்தை உணரும் போது எவ்வளவு அழகாக இருக்கும்!. எவ்வாறு இல்லாமல் போகும்? நீர் பின்பற்றுவது படைப்பினங்களில் சிறந்தவரையல்லவா? நேரில் காண்பது போன்று அவர்களைப் பின்பற்றும் போது எவ்வாறு ஆனந்தம் இல்லாமல் போகும்!. ஒரு நாள் பரீட்சித்துப் பாரும், அந்த உண்மையைக் கண்டு கொள்வீர். அதன் பின் வாழ்வு முழுவதும் உமது நண்பர் முஹம்மத் (ஸல்) அவர்களுடனேயே இருப்பீர் என எதிர்பார்க்கின்றேன்.

குறிப்பு: இதனை அமுல்படுத்த ஏதாவதொரு நாள் அதிகாலையிலிருந்து ஆரம்பிப்பீராக. குறித்த ஒரு தினத்தை சிறந்த தினமாகக் கருதி, அத்தினத்தை இதனை அமுல்படுத்த குறிப்பாக்குவது கூடாது.

நபியவர்களுடன் ஒரு நாள் பயணிக்க முன் அன்னாருடைய தோற்ற அமைப்பை அறிந்து கொள்வது அவசியமாகும்.

# நபியவர்களின் தோற்றம்

நபி (ஸல்) அவர்கள் நடுத்தர உயரமுடையவர்களாகவும் (மேல் முதுகும் மார்பும் விசாலமான நிலையில்) இரண்டு தோள்புயங்களுக்கிடையே அதிக இடைவெளி உள்ளவர்களாகவும் இருந்தார்கள். அவர்களின் தலைமுடி அவர்களின் காதுகளின் சோணையை எட்டும் அளவிற்கு இருந்தது. அவர்கள் அழகான முகம் கொண்டவர்களாகவும், அழகான குணமுடையவர்களாகவும் இருந்தார்கள். வெளிப்படையாகத் தெரியும் அளவிற்கு அதிக உயரமானவர் களாகவும் இல்லை; குட்டையானவர்களாகவும் இல்லை. சுத்த வெள்ளை நிறம் உடையவர்களாகவும் இல்லை; மாநிறம் கொண்டவர்களாகவும் இல்லை; கடும் சுருள் முடியுடையவர்களாகவும் இல்லை; (தொங்கலான) படிந்த முடியுடையவர் களாகவும் இல்லை. அவர்கள் மென்மையான, அழகான, கலையான முகமுடையவர்களாக இருந்தார்கள். வெள்ளியால் வார்க்கப்பட்டவர்களைப் போன்றிருப்பார்கள். ஒளிரும் வெண்ணிறம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

அவர்களின் வியர்வைத் துளிகள் முத்துகளைப் போன்றிருந்தன. அவர்களது தாடியில் அதிகமான முடிகள் இருந்தன. ஒரு மனிதர், ஜாபிர் பின் ஸமுரா (ரலி) அவர்களிடம் "நபி (ஸல்) அவர்களது முகம் வாளைப் போன்று (மின்னிக்கொண்டு நீண்டதாக) இருந்ததா?" என்று கேட்டார். அவர்கள் (அதை மறுத்து), "இல்லை; அவர்களது முகம் சூரியனைப் போன்றும் சந்திரனைப் போன்றும் இருந்தது; வட்டமானதாக இருந்தது என்றார்கள். மேலும் அவர்கள் விசாலமான வாயும் விரிந்த கண்ணும் மெலிந்த குதிகால்களும் உடையவர்களாக இருந்தார்கள். மேலும் அவர்கள் வெண்ணிறம் கொண்டவர்களாகவும் கலையான தோற்றமுடையவராகவும், கொழுத்தவராகவோ, மெலிந்தவராகவோ, அதிக உயரமானவராகவோ, குட்டையானவராகவோ இன்றி நடுத்தரமான உடல்வாகு கொண்டவராகவும் இருந்தார்கள். மேலும் அவர்கள் பருத்த கைகளும் பருத்த பாதங்களும் உடையவர்களாகவும் இருந்தார்கள். அவர்களின் உள்ளங்கைகள் விசாலமானவையாக இருந்தன. அனஸ் (ரலி) கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்களின் உள்ளங்கையை விட மென்மையான பட்டையோ, (பூ வேலைப்பாடு செய்யப்பட்ட) தூய்மையான பட்டையோ நான் தொட்டதில்லை. அவர்களது (உடல்) வாசனையைவிட நறுமணமிக்க "அம்பரை"யோ கஸ்தூரியையோ வேறெந்த நறுமணப் பொருளையோ நுகர்ந்ததேயில்லை. அன்னாருடைய வியர்வை

துடைத்தெடுக்கப்பட்டு சிறந்த வாசனைத் திரவியமாகப் பயன்படுவதற்காக ஒரு போத்தலில் சேமிக்கப்படக் கூடியதாக இருந்தது.

தற்போது நபி (ஸல்) அவர்களின் ஒரு நாளை சுருக்கமாகக் கூறும் நேரமாகும். அஷ்ஷேக் முஹம்மத் நாஸிருத்தீன் அல்பானீ (ரஹ்) அவர்கள் ஸஹீஹ் என சரிகண்ட நபிமொழிகளையும், தேவையேற்பட்டாலே தவிர பிரதான ஆறு ஹதீஸ் நூல்களிலுள்ள நபிமொழிகளைச் சார்ந்தே இது தொகுக்கப்பட்டுள்ளது.

# தூக்கத்திலிருந்து விழித்தல், வுழூச் செய்தல், இரவுத் தொழுகை என்பவற்றில் நபியவர்களின் வழிமுறை

*நபி (ஸல்) அவர்கள் தூக்கத்திலிருந்து விழித்ததும் 'அல்ஹம்து லில்லாஹில்தீ அஹ்யானா பஃத மா அமாத்தனா வ இலைஹிந் நுஷூர்' (எங்களை இறக்கச் செய்த பின்னர் எங்களுக்கு உயிரூட்டிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். மேலும், (மண்ணறையிலிருந்து வெளியேறி) அவனிடமே செல்லவேண்டி உள்ளது) என்று கூறிவிட்டு முதலில் மிஸ்வாக் பல் சுத்தம் செய்வார்கள். சில வேளை ஸூரா ஆல இம்ரானின் "வானங்களையும், பூமியையும் படைத்திருப் பதிலும் இரவு, பகல் மாறிமாறி வருவதிலும் அறிவுடைய மக்களுக்குப் பல சான்றுகள் உள்ளன." என்று ஆரம்பிக்கும் 190ம் வசனத்தில் இருந்து அவ் அத்தியாயத்தின் இறுதிவரை ஓதுவார்கள். பின்னர் அழகாக வுழூச் செய்வார்கள். இயற்கைத் தேவைக்காக மலசலகூடம் செல்லும் போது "அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் குப்ஸி வல் கபாஇஸ்" (இறைவா!*

(அருவருக்கத் தக்க செயல்கள், இழிவான எண்ணங்கள் ஆகியற்றைத் தூண்டும்) ஆண் பெண் ஷைத்தானி(ன் தீங்கி)லிருந்து உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்)" எனும் துஆவையும், வெளியேறும் போது 'குஃப்ரானக' (இறைவா! என்னை மன்னிப்பாயாக!) என்ற துஆவையும் கூறுவார்கள். சுத்தம் செய்யும் போது சில வேளை தண்ணீரையும், சில வேளை மூன்று கற்களையும், இன்னும் சில வேளை இரண்டையும் பயன்படுத்துவார்கள். அன்னார் அதன்போது மறைவிடம் ஒன்றை எடுத்துக் கொள்வார்கள். மிக அரிதாகவே தவிர நின்ற நிலையில் சிறுநீர் கழிக்க மாட்டார்கள்.

வுழூச் செய்யும் போது நீரில் சிக்கனத்தைக் கடைபிடிப்பார்கள். இரு கைகளையும் மூன்று முறை கழுவிவிட்டு, மூன்று முறை வாய் கொப்பளித்து, மூக்கினுள் நீர் செலுத்தி சிந்தி விடுவார்கள். ஒவ்வொரு தடவை அள்ளும் நீரிலும் பாதி வாய்க்கும், மீதி மூக்கிற்க்கும் எடுத்துக் கொள்வார்கள். வலது கையினால் மூக்கிற்கு நீர் செலுத்தி, இடது கையினால் சிந்தி விடுவார்கள். நோன்பாளியாக இல்லாத சந்தர்ப்பத்தில் சற்று மிகைப்படுத்தி செய்யுமாறும் பணித்துள்ளார்கள். பின், நெற்றியில் முடி முளைக்கும் இடத்திலிருந்து நாடிக்குழி வரை முகத்தை மூன்று முறை கழுவுவார்கள். சிலவேளை தாடியைக் குடைந்து கழுவுவார்கள். பின்பு, விரல் நுனியிலிருந்து முழங்கை வரை இரு கைகளையும் மும்மூன்று முறை கழுவுவார்கள். விரல்களுக்கிடையில் குடைந்து கழுவும்படியும் கூறியுள்ளார்கள். பின், தலையை

நீரால் தடவிக் கொள்வார்கள். இரு கைகளையும் நீரில் தொட்டு தலைமுடி ஆரம்பத்திலிருந்து பிடரி வரை கொண்டு சென்று, மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே கொண்டு வருவார்கள். பின் அதே நீரினால் இரு காதுகளின் உள்புறம், வெளிப்புறங்களை தடவிக்கொள்வார்கள். பின், கரண்டைக் கால் வரை இரு கால்களையும் கழுவிக் கொள்வார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவர் முழுமையான முறையில் வுழூச் செய்துவிட்டு, "அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வ அன்ன முஹம்மதன் அப்துல்லாஹி வரஸூலுஹு" (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் உறுதிமொழிகிறேன்) என்று கூறினால், சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் அவருக்காகத் திறக்கப்படுகின்றன. அவற்றில் தாம் நாடிய வாசலில் அவர் நுழைந்துகொள்ளலாம்". அத்துடன் "அல்லாஹும்மஜ்அல்னீ மினத் தவ்வாபீன வஜ்அல்னீ மினல் முததஹ்ஹிரீன்" (இறைவா! என்னை பாவமீட்சி பெறுவோரிலும், தூய்மையானோரிலும் ஆக்கிவிடுவாயாக!) என்பதையும் இணைத்துக் கொள்வார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிமான அல்லது முஃமினான (இறைநம்பிக்கை கொண்ட) அடியார் வுழூச் செய்யும்போது முகத்தைக் கழுவினால், கண்களால் பார்த்துச் செய்த பாவங்கள் அனைத்தும் (முகத்தைக் கழுவிய) நீருடன் அல்லது நீரின் கடைசித்

துளியுடன் முகத்திலிருந்து வெளியேறுகின்றன. அவர் கைகளைக் கழுவும்போது கைகளால் பற்றிச் செய்திருந்த பாவங்கள் அனைத்தும் (கைகளைக் கழுவிய) தண்ணீருடன் அல்லது தண்ணீரின் கடைசித் துளியுடன் வெளியேறுகின்றன. அவர் கால்களைக் கழுவும்போது, கால்களால் நடந்து செய்த பாவங்கள் அனைத்தும் (கால்களைக் கழுவிய) நீரோடு அல்லது நீரின் கடைசித்துளியோடு வெளியேறுகின்றன. இறுதியில், அவர் பாவங்களிலிருந்து தூய்மை அடைந்தவராக (அந்த இடத்திலிருந்து) செல்கிறார்''.

நபி (ஸல்) அவர்கள் இரவில் பதினொரு ரக்அத்கள் தொழுவார்கள். நான்கு ரக்அத்கள் தொழுவார்கள். அதன் அழகையும் நீளத்தையும் நீர் கேட்காதீர்! பின்னர் நான்கு ரக்அத்கள் தொழுவார்கள். அதன் அழகையும் நீளத்தையும் நீர் கேட்காதீர்! பின்னர் மூன்று ரக்அத்கள் தொழுவார்கள். சிலவேளை பதின்மூன்று ரக்அத்களும் தொழுவார்கள். பின்னர் முஅத்தின் வரும்வரை சற்று சாய்ந்து ஓய்வெடுத்துக் கொள்வார்கள். அதான் கூறியதும் பஜ்ருடைய முன் ஸுன்னத் இரு ரக்அத்கள் சுருக்கமாகத் தொழுவார்கள். அதில் அல்காஃபிரூன் (109ம் அத்தியாயம்), அல்இஃக்லாஸ் (112ம் அத்தியாயம்) ஆகிய அத்தியாயங்களை ஓதுவார்கள். வேறு சில சந்தர்ப்பங்களில் பஜ்ருடைய ஸுன்னத்திற்குப் பின் வலது பக்கம் சாய்ந்து கொள்வார்கள்.

அதான் ஒலிப்பதைக் கேட்டால் நபியவர்கள் முஅத்தின் கூறுவதைப் போன்றே கூறுவார்கள். 'ஹய்ய அலஸ் ஸலாஃ'

*(தொழுகையின்பால் விரையுங்கள்), 'ஹய்ய அலல் பலாஹ்' (வெற்றியின்பால் விரையுங்கள்) ஆகிய இரு வார்த்தைகளின் போது மாத்திரம் 'லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்' (நன்மை செய்ய சக்தியோ பாவத்திலிருந்து மீள்தலோ அல்லாஹ்வைக் கொண்டே தவிர நடைபெற மாட்டாது.) என்று கூறுவார்கள். உள்ளத்தால் உறுதியுடன் அதனைக் கூறுபவர் சுவனம் நுழைவார் எனவும் கூறியுள்ளார்கள். அதானுக்குப் பின் தன் மீது ஸலவாத் கூறும் படியும் பணித்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அதான் ஒலிக்கக் கேட்ட பின் அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் தஃவதித் தாம்மா, வஸ்ஸலாதில் காஇமா ஆதி முஹம்மதனில்வஸீலத வல் ஃபலீலத, வப்அஸ்ஹு மகாமன் மஹ்மூதனில்லதீவஹத்தஹு" (பூரணமான இந்த அழைப்பின் இரட்சகனான அல்லாஹ்வே! நிலையான தொழுகைக்குரியவனே! முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு வஸீலா என்ற அந்தஸ்தையும் சிறப்பையும் வழங்குவாயாக! நீ வாக்களித்தவாறு புகழுக்குரிய இடத்தில் அவர்களை எழுப்புவாயாக!') என்ற துஆவை ஓதுகிறவருக்கு மறுமை நாளில் என்னுடைய பரிந்துரை கிடைத்து விடுகிறது'!. மேலும் கூறினார்கள்: முஅத்தின் அதான் சொல்வதைக் கேட்கக் கூடியவர் (அதான் முடிந்த பின்பு) அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக்க லஹு, வ அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு, 'ரழீத்து பில்லாஹி ரப்பன், வபி முஹம்மதின் ரசூலன், வபில் இஸ்லாமி தீனன்' என்று சொன்னால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும். (அல்லாஹ்வைத் தவிர*

வேறு இறைவனில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையேதுமில்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதருமாவார்கள் என்று நான் உறுதிமொழிகிறேன். அல்லாஹ்வை இறைவனாகவும் முஹம்மத் (ஸல்) அவர்களை (அவனுடைய) நபியாகவும் இஸ்லாத்தை மார்க்கமாகவும் நான் மனநிறைவுடன் ஏற்றுக்கொண்டேன்.)

பின்னர் பஜ்ர் தொழுகைக்காக வெளியேறிச் செல்வார்கள். பள்ளிக்குப் போகும் வழியில் பின்வரும் துஆவை ஓதுவார்கள்: "அல்லாஹும்மஜ்அல் ஃபீ கல்பீ நூரன். வஃபீ லிஸானீ நூரன். வஃபீ ஸம்ஈ நூரன். வஃபீ பஸரீ நூரன். வமின் ஃபவ்க்கீ நூரன். வமின் தஹ்த்தீ நூரன். வஅன் யமீனீ நூரன். வஅன் ஷிமாலீ நூரன். வமின் அமாமீ நூரன். வமின் கல்ஃபீ நூரன். வஅழ்ழிம் லீ நூரா". (இறைவா! என் இதயத்திலும் என் நாவிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. என் செவியிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. என் பார்வையிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. எனக்கு மேலேயும், எனக்குக் கீழேயும் ஒளியை ஏற்படுத்துவாயாக. எனது வலப்பக்கத்திலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. எனக்கு இடது பக்கத்திலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. எனக்குப் முன்னாலும், எனக்குப் பின்னாலும் ஒளியை ஏற்படுத்துவாயாக. மேலும் எனக்கு ஒளியை மகத்துவப்படுத்தி வழங்குவாயாக!). மேலும் கூறினார்கள்: 'இருளில் பள்ளிகளுக்கு அதிகம் நடந்து செல்வோருக்கு மறுமையில் பூரணமான ஒளியுண்டென நற்செய்தி கூறுவீராக'.

நபி (ஸல்) அவர்கள் பள்ளிக்குள் நுழையும் போது தனது வலது காலை முதலில் வைத்து 'அஊது பில்லாஹில் அழிமி, வஸுல்தானிஹில் கதீமி மினஷ்ஷைதானிர் ரஜீம்'. (மகத்தான அல்லாஹ்வைக் கொண்டு, பூர்வங்கமான அவனுடைய அதிகாரத்தைக் கொண்டு தூக்கி எறியப்பட்ட ஷைத்தானி(ன்தீங்கி)லிருந்து நான் பாதுகாப்புத் தேடுகிறேன்) என்று கூறிக்கொண்டு நுழைவார்கள். மேலும் பள்ளியினுள் நுழையும் போது 'பிஸ்மில்லாஹி வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ், அல்லாஹும்ம\u200cஃபிர் லீ துனூபீ வஃப்தஹ் லீ அப்வாப ரஹ்மதிக' (அல்லாஹ்வின் பெயரால், அல்லாஹ்வின் தூதருக்கு சாந்தி உண்டாவதாக!, இறைவா! எனது பாவங்களை மன்னித்தருள்வாயாக!, உனது கருணையின் வாயில்களை எனக்குத் திறந்து தருவாயாக!) எனவும், வெளியேறும் போது 'பிஸ்மில்லாஹி வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ், அல்லாஹும்ம\u200cஃபிர் லீ துனூபீ வஃப்தஹ் லீ அப்வாப பழ்லிக' (அல்லாஹ்வின் பெயரால், அல்லாஹ்வின் தூதருக்கு சாந்தி உண்டாவதாக!, இறைவா! எனது பாவங்களை மன்னித் தருள்வாயாக!, உனது அருட்கொடையின் வாயில்களை எனக்குத் திறந்து தருவாயாக!) எனவும் கூறுவார்கள். மேலும் வெளியேறும் போது 'அல்லாஹும்ம ஃஸிம்னீ மினஷ் ஷைதானிர் ரஜீம்' (இறைவா! தூக்கி எறியப்பட்ட ஷைத்தானி(ன்தீங்கி) லிருந்து என்னைப் பாதுகாப்பாயாக!) எனவும் கூறுவார்கள்.

# தொழுகையில் நபிவழி

நபி (ஸல்) அவர்களின் கண்குளிர்ச்சியாக, மன அமைதியாக, துன்பத்தின் போது விரையுமிடமாக தொழுகையே காணப்பட்டது. தொழுகைக்குத் தயாராகும் போது மிஸ்வாக் (ஒரு விதமான மரக்குச்சியினால் பல் சுத்தம் செய்தல்) செய்து கொள்வார்கள். தனக்கு முன்னால் தடுப்பு ஒன்றை ஏற்படுத்தி அதை நெருங்கித் தொழுவார்கள். தனது ஆயுதத்தைக் கூட சில சமயம் தடுப்பாகப் பயன் படுத்துவார்கள். தொழும் போது தனக்கு முன்னால் யாரையும் தாண்டிச் செல்ல விட வேண்டாமெனவும், செல்லும் பட்சத்தில் தடுக்குமாறும் பணித்துள்ளார்கள்.

கிப்லாத் திசையை முன்னோக்கி, பின் இரு கைகளையும் தனது தோள்புயம் அல்லது காதின் கீழ்ப் பகுதி வரை உயர்த்தி ‘அல்லாஹு அக்பர்’ (அல்லாஹ் மிகப் பெரியவன்) என தக்பீர் கூறுவார்கள். பின் தனது வலது கையை இடது கையின் மணிக்கட்டின் புறப்பகுதியில் படுமாறு வைத்து, நெஞ்சின் மீது வைப்பார்கள். தொழுகை முடியும் வரை தான் ஸுஜூத் செய்யும் இடத்தையே நோக்கிக் கொண்டிருப்பார்கள். பின்னர்: ‘அல்லாஹும்ம

பாஇத் பைனீ வபைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல்மஃரிபி. அல்லாஹும்மஃஸில்னீ மின் கதாயாய பிஸ்ஸல்ஜி வல்மாஇ வல்பரத் அல்லாஹும்ம நக்கினீ மின் கதாயாய கமா யுனக்கஸ் ஸௌபுல் அப்யழு மினத்தனஸ்.' (இறைவா! கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே வெகு தூரத்தை நீ ஏற்படுத்தியதைப் போன்று எனக்கும் எனது தவறுகளுக்குமிடையே தூரத்தை ஏற்படுத்துவாயாக, இறைவா! தண்ணீராலும் பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளைக் கழுவி விடுவாயாக, இறைவா! வெண்மையான ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப் படுத்தப்படுவது போன்று என்னை என் தவறுகளிலிருந்து தூய்மைப் படுத்துவாயாக.) என்று கூறிவிட்டு, 'அஊது பில்லாஹிஸ் ஸமீஇல் அழீம், மினஷ் ஷைதானிர் ரஜீம், மின் ஹம்ஸிஹி, வனப்கிஹீ, வனப்ஸிஹி' (எடுத்தெறியப்பட்ட ஷைத்தானின் தீங்கையும், அவனது ஊசலாட்டம், அவனால் பைத்தியம் பிடித்தல், அவனால் தற்பெருமை ஏற்படல் ஆகியவற்றையும் விட்டு அனைத்தையும் கேட்கக் கூடிய, அறியக் கூடிய அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்) என்று கூறி, 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என இரகசியமாகக் கூறுவார்கள். பின்னர் ஒவ்வொரு வசனமாக நிறுத்தி ஸூரா பாத்திஹா முழுதையும் ஓதுவார்கள். அதே போன்றுதான் ஏனைய ஸூராக்களையும் ஓதும் போது அழகாக நீட்டி, ஒவ்வொரு வசனத்தையும் நிறுத்தி தனித்தனியாக ஓதுவார்கள். ஸூரா பாத்திஹா ஓதி

முடிந்ததும் சத்தமாக ‘ஆமீன்’ எனக் கூறுவார்கள். அதே நேரம் வானவர்களும் ‘ஆமீன்’ கூறுவதாகவும், இரு ஆமீன்களும் ஒரே நேரத்தில் அமையும் போது தொழுகையாளியின் பாவம் மன்னிக்கப்படும் எனவும் கூறியுள்ளார்கள்.

பஜ்ர் தொழுகையில் பாத்திஹாவுக்குப் பின் ‘‘திவால் முபஸ்ஸல்’’ (ஸூரா அல்ஹுஜ்ராத் (49) முதல் ஸூரா அல்முர்ஸலாத்(78) வரை) எனப்படும் அத்தியாயங்களில் இருந்து 60 முதல் 100 வசனங்கள் அளவு ஓதுவார்கள். சில சந்தர்ப்பங்களில் வேறு அத்தியாயங்களில் இருந்தும் ஓதுவார்கள். வெள்ளிக்கிழமை பஜ்ரின் முதல் ரக்அத்தில் அலிப் லாம் மீம் ஸஜ்தாவும் (32ம் அத்தியாயம்), இரண்டாம் ரக்அத்தில் தஹ்ரும் (76ம் அத்தியாயம்) ஓதுவார்கள். ளுஹர்த் தொழுகையில் முதல் இரு ரக்அத்களிலும் 30 வசனங்கள் அளவும், இறுதி இரு ரக்அத்களிலும் 15 வசனங்கள் அல்லது அதன் பாதியளவும் ஓதுவார்கள். அஸர்த் தொழுகையில் முதல் இரு ரக்அத்களிலும் 15 வசனங்கள் அளவும், இறுதி இரு ரக்அத்களிலும் அதன் பாதியளவும் ஓதுவார்கள். சில வேளை ளுஹர், அஸர் தொழுகைகளில் இறுதி இரு ரக்அத்களிலும் பாத்திஹாவுடன் சுருக்கிக் கொள்வார்கள்[1]. இன்னும் சிலவேளை

1 பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் ளுஹர், அஸர்த் தொழுகைகளில் இறுதி இரு ரக்அத்களிலும் ஸூரா பாத்திஹாவுடன் சுருக்கிக் கொள்வதே நபிவழியாகும். சில சந்தர்ப்பங்களில் மாத்திரம்தான் பாத்திஹாவுடன் வேறு ஸூராக்கள் ஓதுவார்கள்.

*பின்னாலுள்ளவர்களுக்குக் கேட்கவும் ஓதுவார்கள். மஃரிப் தொழுகையில் ''கிஸாருல்முபஸ்ஸல்'' (ஸூரா அழ்ழுஹா (93) முதல் ஸூரா அந்நாஸ் (114) வரை) எனப்படும் அத்தியாயங்களில் இருந்து ஓதுவார்கள். சில சந்தர்ப்பங்களில் மஃரிப் தொழுகையில் ''கிஸாருல் முபஸ்ஸல்'' அல்லாத அத்தூர், அல்அஃராப் போன்ற நீண்ட அத்தியாயங்களில் இருந்தும் ஓதுவார்கள். இஷாத் தொழுகையில் ''ஔஸாதுல் முபஸ்ஸல்'' (ஸூரா அந்நபஃ (78) முதல் ஸூரா அழ்ழுஹா (93) வரை) எனப்படும் அத்தியாயங்களில் இருந்து ஓதுவார்கள்.*

*நிலையில் ஓதிமுடிந்ததும் தனது இரு கைகளையும் உயர்த்தி தக்பீர் சொல்லியவராக ருகூஃ செய்வார்கள் (குனிவார்கள்). (ருகூஃவில்) தனது விரல்களை பிரித்தவண்ணம் தனது இருகைகளையும் முட்டுக்காலில் வைத்து, தலையும் முதுகும் சமமாக இருக்குமாறு அமைத்துக் கொள்வார்கள். அதில் 'ஸுப்ஹான ரப்பியல் அழீம்' (மகத்தான என்னுடைய இறைவனைத் துதிக்கிறேன்) என்று மூன்று முறை கூறிக்கொள்வார்கள். சில வேளை அதிகமாகவும் கூறுவார்கள். அதனுடன் சிலவேளை 'ஸுப்பூஹுன் குத்தூஸுன் ரப்புல் மலாஇகதி வர்ரூஹ்' (இறைவா நீ தூயவன், மிகவும் தூய்மையானவன், மலக்குகள் மற்றும் ஜிப்ரீலுடைய இரட்சகன்) என்றும், 'ஸுப்ஹானகல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக அல்லஹும்மஃபிர்லீ' (இறைவா நீ தூயவன், எங்கள் இறைவா! உன்னைப் புகழ்கிறேன் என்னை மன்னித்துவிடுவாயாக) என்பதனையும் கூறுவார்கள்.*

*ருகூஃவிலும் ஸுஜூதிலும் இதனை அதிகமாக ஓதுவார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'ருகூஃ அல்லது ஸஜ்தாச் செய்துகொண்டிருக்கையில் குர்ஆன் (வசனங்களை) ஓத வேண்டாமென்று நான் தடை விதிக்கப்பெற்றுள்ளேன். ருகூஃவில் வலிவும் மாண்பும் உடைய இறைவனை மகிமைப்படுத்துங்கள். ஸஜ்தாவில் முனைந்து பிரார்த்தியுங்கள். உங்கள் பிரார்த்தனை ஏற்கப்பட அது மிகவும் தகுதியானதாகும்'.*

*பின் 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா' (தன்னைப் புகழ்வதை அல்லாஹ் கேட்டுக் கொண்டான்) என்று கூறியவர்களாக நடுநிலைக்கு வருவார்கள். நடுநிலையில் 'அல்லாஹும்ம ரப்பனா வலகல் ஹம்து' (இறைவா! எங்கள் இரட்சகனே! உனக்கே புகழனைத்தும்), 'ரப்பனா வலகல் ஹம்து' (எங்கள் இரட்சகனே! உனக்கே புகழனைத்தும்), 'ரப்பனா லகல் ஹம்து' (எங்கள் இரட்சகனே! உனக்கே புகழனைத்தும்), 'அல்லாஹும்ம ரப்பனா லகல் ஹம்து' (இறைவா! எங்கள் இரட்சகனே! உனக்கே புகழனைத்தும்) ஆகிய நான்கு முறைகளில் ஒன்றை ஓதுவார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இமாம் 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா' என்று கூறும்போது நீங்கள் 'அல்லாஹும்ம ரப்பனா லகல் ஹம்து' எனக் கூறுங்கள்! யாருடைய இந்தக் கூற்று வானவர்களின் கூற்றுடன் ஒத்து அமைகிறதோ அவரின் முன்பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன'. மேலும் 'ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரகன் ஃபீஹி' (தூய்மையான அருள்*

நிறைந்த ஏராளமான புகழ் அனைத்தும் உனக்கே உரியது.) என்று ஒருவர் கூறிய போது அதனை நபியவர்கள் அங்கிகரித்து, தொழுது முடித்ததும் 'இந்த வார்த்தைகளைக் கூறியவர் யார்?' என்று கேட்டு விட்டு 'முப்பதுக்கும் மேற்பட்ட வானவர்கள் இதைப் பதிவு செய்வதில் போட்டி போட்டதை கண்டேன்' எனக் கூறினார்கள். இன்னும் சில வேளை 'மில்அஸ் ஸமாவாதி வமில்அல் அர்ழி வமில்அ மாஷிஃதே மின்பஃது' (வானங்கள் நிரம்ப, பூமிகள் நிரம்ப, இதற்குப் பிறகு நீ விரும்பும் அத்தனை பொருள்களும் நிரம்ப புகழ் அனைத்தும் உனக்கே) என்ற வார்த்தையையும் அதிகரிப்பார்கள்.

பின்பு தக்பீர் கூறியவராக ஸுஜூது சிரம் பணிதல் செய்வார்கள். தனது மூக்கு மற்றும் நெற்றியை தரையில் அழுத்தி, இரு உள்ளங்கைகளையும் விரித்து, அவற்றில் ஊண்டிக் கொள்வார்கள். கை விரல்களை சேர்த்து கிப்லாத் திசையில் தோள்புயம் அல்லது இரு காதுகளுக்கும் நேராக வைப்பார்கள். இரு முழங்கால் களையும், கால் விரல்களையும் தரையில் அழுத்தி வைத்து, விரல்களை கிப்லாத் திசையில் இருக்குமாறு வைத்துக் கொள்வார்கள். பின்னாலிருந்து பார்க்கும் போது அன்னாரின் அக்குள் பகுதியின் வெண்மை விளங்கும் அளவு தனது தோள் புயங்களை விலாக்களை விட்டும் தூரமாக்கியும், வயிறை தொடைகளை விட்டும் தூரமாக்கியும், தொடைகளைக் கால்களை விட்டும் தூரமாக்கியும் வைப்பார்கள். தனது இரு

முன்னங்கைகளையும் தரையில் படாமல் உயர்த்தி வைப்பார்கள். 'ஸுப்ஹான ரப்பியல் அஃலா' (உயர்வான என் இறைவன் பரிசுத்தமானவன்) என்று மூன்று முறை அல்லது அதற்கதிகமாகக் கூறுவதுடன், ருகூஃவில் நாம் ஏற்கனவே கூறிய திக்ருகளையும் ஓதுவார்கள். அத்துடன் பின்வரும் துஆக்களையும் கூறுவார்கள்:

'அல்லாஹும்மஃபிர்லீ தன்பீ குல்லஹு திக்கஹு வஜில்லஹு வஅவ்வலஹு வஆகிரஹு வஅலானியதஹு வஸிர்ரஹு' (இறைவா! என் பாவத்தில் சிறியது, பெரியது, முதலாவது, கடைசியானது, பகிரங்கமானது, இரகசியமானது என அனைத்தையும் மன்னிப்பாயாக!.)

'அல்லாஹும்ம லக ஸஜத்து வபிக ஆமன்து வலக அஸ்லம்து ஸஜத வஜ்ஹீ லில்லதீ கலகஹு வஸவ்வரஹு வஷக்க ஸம்அஹு வபஸரஹு தபாரகல்லாஹு அஹ்ஸனுல் காலிகீன்'. (இறைவா! உனக்காக ஸஜ்தா செய்தேன். உன்னையே நம்பினேன். உனக்கே கட்டுப்பட்டேன். என் முகத்தைப் படைத்து, வடிவமைத்து, செவிப்புலனையும் பார்வைப்புலனையும் அதில் அமைத்த இறைவனுக்கே என் முகம் பணிந்து விட்டது. அழகிய முறையில் படைக்கும் அல்லாஹ் பாக்கியம் மிக்கவன்).

'அல்லாஹும்ம இன்னீ அவூது பிரிழாக மின் ஸகதிக வபிமுஆஃபாதிக மின் உகூபதிக வஅவூது பிக மின்க லா உஹ்ஸீ ஸனாஅன் அலைக அன்த கமா அஸ்னைத அலா நஃப்ஸிக'. (இறைவா! உன் திருப்தியின் மூலம்

*உன் அதிருப்தியை விட்டு பாதுகாப்புத் தேடுகிறேன். உனது மன்னிப்பின் மூலம் உனது தண்டனையை விட்டு பாதுகாப்புத் தேடுகிறேன். உன்னை என்னால் முழுமையாகப் புகழ இயலாது. நீ உன்னை எவ்வாறு புகழ்ந்து கொண்டாயோ அவ்வாறு இருக்கிறாய்).*

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: *''ஓர் அடியான் ஸுஜூதிலேயே தனது இறைவனுக்கு மிக நெருக்கமாக உள்ளான், எனவே அதில் அதிகமாகப் பிரார்த்தியுங்கள்''.*

பின்பு தக்பீர் சொல்லியவராக ஸுஜூதில் இருந்து எழுந்து உட்கார்வார்கள். இடது காலை விரித்து அதன் மீது உட்கார்ந்து வலது காலை நாட்டி, அதன் விரல்களை கிப்லாத்திசையில் இருக்குமாறு வைத்துக் கொள்வார்கள். தனது இரு தொடைகள், அல்லது முழங்கால்களில் இரு கைகளையும் வைத்துக் கொள்வார்கள். அதில் பின்வரும் இரு துஆக்களில் ஒன்றை ஓதுவார்கள்:

*'ரப்பிஃபிர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ வர்பஃனீ வஹ்தினீ வஆபினீ வர்ஸுக்னீ' (இறைவா! என்னை மன்னித்து விடு, எனக்குக் கிருபை செய், எனக்கு ஆறுதல் அளித்திடு, என்னை உயர்த்தி விடு, எனக்கு நேர்வழி காட்டிடு, எனக்கு சுகம் கொடு, எனக்கு வாழ்வாதாரம் அளித்து விடு).*

*'ரப்பிஃபிர்லீ ரப்பிஃபிர்லீ' (இறைவா! என்னை மன்னித்து விடு, இறைவா! என்னை மன்னித்து விடு).*

ஸுஜூத் செய்யும் அளவிற்கு நபியவர்கள் இரு ஸஜ்தாக்களுக்குமிடையிலான அமர்வை நீட்டுவார்கள். பின்பு இரண்டாம் ஸுஜூதிற்குச் சென்று முதலாவதைப் போன்று அதிலும் செய்வார்கள். பின் இரண்டாம் ரக்அத்திற்காக எழுவார்கள்.

அத்தஹிய்யாத்திற்காக அமரும் போது வலது காலை நாட்டி, இடது காலை விரித்துஅதன் மீது உட்கார்ந்து, வலது கையை வலது தொடையின் மீது ஆட்காட்டி விரலைத் தவிர ஏனைய விரல்களை மடக்கி வைத்து உட்கார்வார்கள். ஆட்காட்டி விரலால் கிப்லாத்திசையை சுட்டிக்காட்டுவார்கள். ஒருவரை அழைப்பது போல் அவ்விரலை அசைப்பார்கள். தனது பார்வையையும் அவ்விரலின் பக்கமே செலுத்துவார்கள். பெருவிரலை நடுவிரலுடன் வளையல் அமைப்பிலும் சில வேளை வைத்துக்கொள்வார்கள். இடது கையை இடது தொடை, முழங்காலின் மீது விரித்து வைத்துக்கொள்வார்கள். பின்பு இவ்விருப்பில் பல வார்த்தைப் பிரயோகங்களில் அத்தஹிய்யாத் ஓதுவார்கள், அதில் ஒன்று பின்வருமாறு:

'அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாது வத்தய்யிபாது அஸ்ஸலாமு அலைக அய்யுஹந் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹூ அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ'. (காணிக்கைகளும் வணக்கங்களும் பாராட்டுக்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே உங்களின் மீது ஸலாமும் அல்லாஹ்வின் ரஹ்மத்தும்

*பரகத்தும் ஏற்படட்டுமாக! எங்களின் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் ஸலாம் உண்டாகட்டும், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று உறுதியாக நம்புகிறேன். மேலும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாக இருக்கிறார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்).*

*பின்பு தன் மீது ஸலவாத் கூறுவார்கள்: 'அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலாஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்ராஹீம வஅலாஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலாஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலாஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத்'. (இறைவா! இப்ராஹீம் அவர்களின் மீதும் இப்ராஹீம் அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ கருணை புரிந்ததைப் போல் முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் கருணை புரிந்திடு. நீயே புகழுக்குரியவனும், கண்ணியமிக்கவனும் ஆவாய். இறைவா! இப்ராஹீம் அவர்களின் மீதும் இப்ராஹீம் அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ உன் அருள் வளத்தைப் பொழிந்ததைப் போல் முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் உன் அருள் வளத்தைப் பொழிந்திடு, நீயே புகழுக்குரியவனும், கண்ணியமிக்கவனும் ஆவாய்).*

நபி (ஸல்) அவர்கள் மூன்றாம் ரக்அத்திற்காக எழும் போது இரு கைகளையும் உயர்த்தி தக்பீர் கூறுவார்கள். இறுதி அத்தஹிய்யாத்திற்காக அமரும் போது முதல் அமர்வில் ஓதியதைப் போன்றே ஓதுவார்கள். எனினும்

வலது காலை நாட்டி, இடது காலை வலது காலுக்குக் கீழால் நிலத்தில் அமர்வார்கள். அத்தஹிய்யாத் ஓதி முடிந்ததும் நான்கு விடயங்களை விட்டும் பாதுகாப்புத் தேடுமாறு பணித்துள்ளார்கள். 'அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மின் அதாபி ஜஹன்னம வமின் அதாபில் கப்ரி வமின் பித்னதில் மஹ்யா வல்மமாதி வமின் பித்னதில் மஸீஹித் தஜ்ஜால்'. (எங்கள் இரட்சகனே! நரக வேதனையிலிருந்தும், கப்ருடைய வேதனையிலிருந்தும், வாழ்வு, மரணம் ஆகியவற்றின் சோதனையிலிருந்தும், தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்).

மேலும் பின்வரும் துஆக்களையும் ஓதுவார்கள்:

'அல்லாஹும்ம இன்னீ ளலம்த்து நப்ஸீ ளுல்மன் கஸீரன் வலா யஃஃபிருத் துனூப இல்லா அன்த, பக்பிர்லீ மஃஃபிரதன் மின் இன்திக வர்ஹம்னீ இன்னக அன்தல் கபூருர் ரஹீம்'. (இறைவா! எனக்கே நான் அதிகமான அநீதிகளைச் செய்து விட்டேன். உன்னைத் தவிர யாரும் பாவங்களை மன்னிக்க முடியாது. எனவே உன் புறத்திலிருந்து எனக்கு மன்னிப்பு வழங்கு. எனக்கு அருள் புரிவாயாக. நீயே மன்னிப்பவன். நிகரற்ற அன்புடையவன்).

'அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக வஷுக்ரிக வஹுஸ்னி இபாததிக'. (இறைவா! உன்னை நினைவுகூரவும், உனக்கு நன்றி செலுத்தவும், உன்னை அழகாக வணங்கவும் எனக்கு உதவி செய்வாயாக!).

‘அல்லாஹும்மஃபிர்லீ மா கத்தம்து வமா அக்கர்து வமா அஸ்ரர்து வமா அஃலன்து வமா அஸ்ரப்து அன்த அஃலமு பிஹி மின்னீ அன்தல் முகத்திமு வ அன்தல் முஅக்கிரு லாயிலாஹ இல்லா அன்த’ .(நான் முந்திச் செய்ததையும், பிந்திச் செய்வதையும், நான் இரகசியமாகச் செய்ததையும், வெளிப்படையாகச் செய்ததையும், நான் வரம்பு மீறி நடந்து கொண்டதையும், என்னிடமிருந்து எதை நீ அறிந்து வைத்துள்ளாயோ அதையும் மன்னிப்பாயாக. நீயே முற்படுத்துபவன். நீயே பிற்படுத்துபவன். உன்னைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை).

பின்னர் தனது வலது கன்னத்தின் வெண்மை தெரியும் அளவு திரும்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் என்று ஸலாம் கூறிவிட்டு, இடது புறமும் அதே போன்று திரும்பி ஸலாம் கூறுவார்கள்.

ஸலாம் கொடுத்த பின் அஸ்தஃபிருல்லாஹ் இறைவா உன்னிடம் பாவமின்னிப்புத் தேடுகிறேன் என்று மூன்று தடவை கூறிவிட்டு, பின் ‘அல்லாஹும்ம அந்தஸ்ஸலாமு வமின்கஸ்ஸலாமு தபாரக்த யாதல்ஜலாலி வல்இக்ராம’. (இறைவா! நீ சாந்தியளிப்பவன், உன்னிடமிருந்தே சாந்தி ஏற்படுகிறது. மகத்துவமும் கண்ணியமும் உடையவனே நீ பாக்கியமானவன்).

பின்னர் ‘லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லாஷரீகலஹூ லஹுல் முல்கு வலஹுல்ஹம்து வஹுவ அலாகுல்லிஷைஇன் கதீர், அல்லாஹும்ம லாமானிஅ

லிமாஅஃதைத வலாமுஃதிய லிமாமனஃத வலாயன்பஉ தல்ஜத்தி மின்கல் ஜத்து'. (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை, துணை எதுவுமில்லை, அரசாட்சி அனைத்தும் அவனுக்கே உரியது, இன்னும் புகழனைத்தும் அவனுக்கே உரியது, மேலும் அவன் அனைத்துப் பொருட்கள் மீதும் சக்தி வாய்ந்தவன், எங்கள் இரட்சகனே! நீ கொடுப்பதைத் தடுப்பவர் எவரும் இல்லை, நீ தடுப்பதைக் கொடுப்பவர் எவரும் இல்லை, மதிப்புடைய எவரும் எந்தப் பலனும் அளிக்க மாட்டார், மதிப்பு உன்னிடமே உள்ளது) என்று கூறுவார்கள்.

அத்துடன் 'லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லாஷரீகலஹூ லஹுல்முல்கு வலஹுல்ஹம்து வஹுவ அலாகுல்லிஷைஇன் கதீர், லாஹெளல வலாகுவ்வத இல்லாபில்லாஹ், லாஇலாஹ இல்லல்லாஹு வலாநஃபுது இல்லா இய்யாஹு லஹுந்நிஃமது வலஹுல் பழ்லு வலஹுஸ்ஸனாஉல் ஹஸன். லாஇலாஹ இல்லல்லாஹு முஃலிஸீன லஹுத்தீன வலெள கரிஹல் காபிரூன்'. (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை, துணை எதுவுமில்லை, அரசாட்சி அனைத்தும் அவனுக்கே உரியது, இன்னும் புகழனைத்தும் அவனுக்கே உரியது, மேலும் அவன் அனைத்துப் பொருட்கள் மீதும் சக்தி வாய்ந்தவன், தீமையிலிருந்து விலகுவதும் நன்மையின் மீது ஆற்றல் பெறுவதும் அல்லாஹ்வின் உதவி கொண்டே தவிர

இல்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர எவருமில்லை. அவனைத்தவிர வேறெவரையும் நாங்கள் வணங்கமாட்டோம். அருள் அவனுடையது. உபகாரம் அவனுடையது. அழகிய புகழ்களும் அவனுடையன. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர எவருமில்லை. நிராகரிப்போர் வெறுத்தாலும் கலப்பற்ற தூய்மையான வணக்கங்கள் அவனுக்கு மட்டுமே உரியன.) என்றும் கூறுவார்கள். மேலும் 'ரப்பி கினீ அதாபக யவ்ம தப்அஸு இபாதக' (என் இரட்சகனே! உனது அடியார்களை எழுப்பும் (மறுமை) நாளில் என்னை உனது தண்டனையில் இருந்து பாதுகாத்திடுவாயாக!) என்றும் கூறுவார்கள்.

ஒவ்வொரு கடமையான தொழுகைக்குப் பின்னாலும் 'ஸுப்ஹானல்லாஹ்' 33, 'அல்ஹம்து லில்லாஹ்' 33, 'அல்லாஹு அக்பர்' 33 தடவை கூறி விட்டு, அதனை 100ஆகப் பரிபூரணப்படுத்த ''லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லா ஷரீக லஹூ, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்'' என்று ஓதுமாறு தனது சமூகத்திற்கு நபியவர்கள் பணித்து, அவ்வாறு ஓதுபவரின் பாவங்கள் கடல்நுரை அளவு இருந்தாலும் மன்னிக்கப்படுவதாகக் கூறினார்கள். இந்த திக்ருகளை நபியவர்கள் சத்தமிட்டு ஓதுவதுடன் தஸ்பீஹ்களை விரலால் எண்ணி ஓதுவார்கள்.

கடமையான தொழுகைகளுக்குப் பின்னால் ஆயதுல் குர்ஸி (ஸூரா பகராவின் 255ம் வசனம்) ஓதுபவர் சுவனம் செல்ல அவர் மரணிப்பது மாத்திரமே தடையாக

உள்ளதென நபியவர்கள் கூறியுள்ளதுடன், ஸூரதுல் இஃலாஸ் (குல்ஹுவல்லாஹு அஹத்), ஸூரதுல் பலக் (குல் அஊது பிரப்பில் பலக்), ஸூரதுந்நாஸ் (குல் அஊது பிரப்பிந்நாஸ்) ஆகிய ஸூராக்களையும் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னாலும் ஓதுமாறு பணித்துள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் பஜ்ர் தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் 'அல்லஹும்ம இன்னீ அஸ்அலுக இல்மன் நாஃபிஆ, வரிஸ்கன் தய்யிபா, வஅமலன் முதகப்பலா' (இறைவா! உன்னிடம் பயனுள்ள அறிவையும், சுத்தமான வாழ்வாதாரத்தையும், ஏற்றுக்கொள்ளப்படும் நற்செயலையும் வேண்டுகின்றேன்!) எனக் கூறுவார்கள்[1]. மேலும் கூறினார்கள்: 'யாராவது பஜ்ர், மஃரிப் ஆகிய தொழுகைகள் முடிந்து வீடு திரும்ப முன் உட்கார்ந்தவாறே ''லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லா ஷரீக லஹூ, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்'' என்று 10 தடவைகள் ஓதினால் அவை ஒவ்வொன்றுக்காகவும் அல்லாஹ் 10 நன்மைகள் எழுதி, 10 பாவங்களை மன்னித்து, 10 அந்தஸ்த்துக்களை உயர்த்துகின்றான். அவனுக்கு அவை ஷைத்தானின் தீங்குகள், மற்றும் அனைத்து கெடுதிகளையும் விட்டும் பாதுகாப்பாக அமைகின்றன. இணைவைப்பைத் தவிர

1 மேற்கண்ட பிரார்த்தனையை பஜ்ருத் தொழுகைக்குப் பின் ஓதுவது பற்றி இடம்பெற்றுள்ள நபிமொழி சில விமர்சனங்களுக்குட்பட்டதாகும். நேரம், சந்தர்ப்பங்களைக் குறிப்பாக்காமல் பொதுவாக ஓதுவதில் ஆட்சேபனையில்லை.

வேறு எந்தப்பாவமும் அல்லாஹ்வை சந்திக்க அவருக்குத் தடையாக அமைய மாட்டாது. அவரை விட சிறப்பாக இன்னொருவர் நற்செயல்புரிந்தாலே தவிர அவர்தான் மக்களில் சிறப்பாக நற்செயல் புரிந்தவராகின்றார்[1]'.

நபி (ஸல்) அவர்கள் ஐவேளைத் தொழுகைகளில் அதிக கவனம் செலுத்துவார்கள். தினமும் அல்லாஹ் தன் அடியார் மீது அதனை விதியாக்கி, அதன் மூலம் பாவங்களை மன்னிப்பதாகக் கூறியுள்ளார்கள். மேலும் வுழூவை அழகாகச் செய்து, உள்ளச்சத்துடன் அதன் கடமைகளைச் செய்தவருக்கு அவர் பெரும்பாவங்களில் ஈடுபடாமலிருக்கும் வரை, அவை பாவங்களுக்கான பரிகாரகாரமாகின்றதாகவும் நபியவர்கள் கூறினார்கள். அத்துடன் வேண்டு மென்றே அதனை விட்டவன் இறைநிராகரிப்பாளனாகி விடுவதாகவும் கூறியுள்ளார்கள்.

பள்ளியில் அத்தொழுகைகளைக் கூட்டாகத் தொழுவதை நபியவர்கள் ஊக்கப் படுத்தியுள்ளார்கள். அன்னார் கூறினார்கள் : 'ஒருவர் தம் வீட்டில் அல்லது கடை வீதியில் தொழுவதை விட ஜமாஅத்துடன் தொழுவது இருபத்தி ஐந்து மடங்கு சிறந்ததாக

1 பஜ்ர், மஃரிப் தொழுகைகளுக்குப் பின் இவ்வாறு 10 தடவை இக்கலிமாவை ஓதுவது பற்றி இடம்பெற்றுள்ள நபிமொழியும் விமர்சனத்திற்குரியதாகும். காலை, மாலை திக்ருகளில் நபியவர்கள் இவ்வாறு ஓதுவார்கள் என்பதை அறிவிப்பாளர் வரிசையிலுள்ள சிலர் தவறுதலாக இவ்விரு தொழுகைகளுக்குப் பின்னாலும் கூறியுள்ளனர் என்பதே ஹதீஸ்கலை வல்லுனர்களின் கூற்றாகும்.

இருக்கிறது. அதாவது, ஒருவர் வுழூச் செய்து, அதை அழகாகவும் செய்து, பின்னர் தொழ வேண்டுமென்ற எண்ணத்திலேயே பள்ளிவாசலுக்குப் புறப்பட்டால் அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் அல்லாஹ் ஓர் அந்தஸ்தை உயர்த்துகிறான். ஒரு பாவத்தை அழிக்கிறான். அவர் தொழுமிடத்தில் அவருக்காக வானவர்கள் பிரார்த்திக்கின்றனர். தங்கள் பிரார்த்தனையில் 'இறைவா! நீ இந்த மனிதனின் மீது அருள் புரிவாயாக! உன்னுடைய கருணையை அவருக்குச் சொரிவாயாக!' என்றும் கூறுவார்கள். உங்களில் ஒருவர் தொழுகையை எதிர்பார்த்திருக்கும் போதெல்லாம் அவர் தொழுகையிலேயே இருக்கிறார்.' அவ்வாறு பள்ளியில் கூட்டுத்தொழுகையில் கலந்து கொள்ளாதவர் களுடைய வீடுகளை எரிக்கவும் எத்தனித்துள்ளார்கள். மேலும் கூறினார்கள் : 'இஷாத் தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றியவர் இரவில் பாதி நின்று வணங்கியவர் போலாவார். பஜ்ரையும் ஜமாஅத்தாக நிறைவேற்றியவர் முழு இரவையும் நின்று வணங்கியவர் போலாவார்'. மேலும் 'பஜ்ர், அஸர்த் தொழுகைகளைத் தொழுபவர் சுவனம் நுழைவார்' எனவும் கூறினார்கள்.

கடமையான தொழுகைக்கு மேலதிகமாக நபியவர்கள் அவற்றிற்கு முன், பின் ஸுன்னத்துக்களும் பேணித் தொழுதுள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் ளுஹருக்கு முன் இரண்டு ரக்அத்கள், ளுஹருக்குப் பின் இரண்டு ரக்அத்கள், மஃரிபிற்குப் பின் வீட்டில் இரண்டு

ரக்அத்கள், இஷாவிற்குப் பின் வீட்டில் இரண்டு ரக்அத்கள், ஸுப்ஹுக்கு முன் இரண்டு ரக்அத்கள் ஆகிய பத்து ரக்அத்களைத் தொழுததை நான் நினைவில் வைத்திருக்கிறேன் என இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். சில வேளை வீட்டிலே ளுஹருக்கு முன் நான்கு ரக்அத்கள் தொழுவார்கள். மஃரிபுடைய பின் ஸுன்னத்திலே ஸூரா அல்காஃபிரூன் (109ம் அத்தியாயம்) ஸூரா இஃலாஸ் (112ம் அத்தியாயம்) ஆகியவற்றை ஓதுவார்கள். பஜ்ருடைய முன் ஸுன்னத்திலும் இவ்விரண்டையும் ஓதுவார்கள். இன்னும் சிலவேளை பின்வரும் வசனங்களையும் ஓதுவார்கள்.

முதலாம் ரக்அத்தில்,

﴿قُولُوٓاْ ءَامَنَّا بِٱللَّهِ وَمَآ أُنزِلَ إِلَيۡنَا وَمَآ أُنزِلَ إِلَىٰٓ إِبۡرَٰهِـۧمَ وَإِسۡمَٰعِيلَ وَإِسۡحَٰقَ وَيَعۡقُوبَ وَٱلۡأَسۡبَاطِ وَمَآ أُوتِيَ مُوسَىٰ وَعِيسَىٰ وَمَآ أُوتِيَ ٱلنَّبِيُّونَ مِن رَّبِّهِمۡ لَا نُفَرِّقُ بَيۡنَ أَحَدٖ مِّنۡهُمۡ وَنَحۡنُ لَهُۥ مُسۡلِمُونَ﴾ [البقرة: ١٣٦].

“அல்லாஹ்வையும், எங்களுக்கு அருளப்பட்டதையும், இப்ராஹீம், இஸ்மாஈல், இஸ்ஹாக், யாகூப் மற்றும் (அவரது) வழித்தோன்றல்களுக்கு அருளப் பட்டதையும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் வழங்கப்பட்டதையும், ஏனைய நபிமார்களுக்கு தமது இறைவனிடமிருந்து வழங்கப்பட்டதையும் நம்பினோம்; அவர்களுக்கிடையே பாகுபாடு காட்டமாட்டோம்; அவனுக்கே நாங்கள் கட்டுப்பட்டவர்கள்’’ என்று கூறுங்கள்! (பகரா : 136)

இரண்டாம் ரக்அத்தில்

﴿قُلۡ يَٰٓأَهۡلَ ٱلۡكِتَٰبِ تَعَالَوۡاْ إِلَىٰ كَلِمَةٖ سَوَآءِۭ بَيۡنَنَا وَبَيۡنَكُمۡ أَلَّا نَعۡبُدَ إِلَّا ٱللَّهَ وَلَا نُشۡرِكَ بِهِۦ شَيۡـٔٗا وَلَا يَتَّخِذَ بَعۡضُنَا بَعۡضًا أَرۡبَابٗا مِّن دُونِ ٱللَّهِۚ فَإِن تَوَلَّوۡاْ فَقُولُواْ ٱشۡهَدُواْ بِأَنَّا مُسۡلِمُونَ﴾ [آل عمران: ٦٤].

*“வேதமுடையோரே! நாம் அல்லாஹ்வைத் தவிர (யாரையும்) வணங்கக் கூடாது; அவனுக்கு இணையாக எதையும் கருதக் கூடாது; அல்லாஹ்வையன்றி நம்மில் ஒருவர் மற்றவரைக் கடவுள்களாக ஆக்கக் கூடாது என்ற எங்களுக்கும், உங்களுக்கும் பொதுவான கொள்கைக்கு வாருங்கள்!’’ என்று கூறுவீராக! அவர்கள் புறக்கணித்தால் “நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்களே சாட்சிகளாக இருங்கள்!’’ எனக் கூறி விடுங்கள்! (ஆல இம்ரான் : 64).*

*மேலும் நபி (ஸல்) அவர்கள் ளுஹாத் தொழுகையையும் தொழுவார்கள். அதனை அபூ ஹுரைரா (ரலி) அவர்களுக்கும் உபதேசித்ததுடன், மனிதன் தினமும் தனது 360 மூட்டுக்களுக்கும் செய்ய வேண்டிய தானத்திற்கு இவ்விரு ரக்அத்களும் ஈடாகுமெனவும் கூறியுள்ளார்கள். மேலும் நபியவர்கள் அஸருக்கு முன் இரண்டிரண்டாக நான்கு ரக்அத்கள் தொழுவார்கள். ‘அஸருக்கு முன் நான்கு ரக்அத்கள் தொழுதவருக்கு அல்லாஹ் அருள் புரிவானாக!’ என நபியவர்கள் கூறினார்கள்.*

# காலை, மாலை ஓத வேண்டிய திக்ருகளில் நபிவழி

நபி (ஸல்) அவர்கள் பஜ்ருத் தொழுததும் சூரியன் உதையமாகும் வரை தொழுமிடத்திலேயே உட்கார்ந்து அல்லாஹ்வை நினைவுகூர்வார்கள்.

காலையில் 'அல்லாஹும்ம பிக அஸ்பஹ்னா, வபிக அம்ஸைனா, வபிக நஹ்யா வபிக நமூது வஇலைகந் நுஷூ ர்' (இறைவா! உன்னைக் கொண்டே நாம் காலைப் பொழுதை அடைந்தோம், உன்னைக் கொண்டே நாம் மாலைப் பொழுதையும் அடைவோம், மேலும் உன்னைக் கொண்டே நாம் உயிர்பெற்றோம், உன்னைக் கொண்டே நாம் மரணிப்போம், மேலும் நாம் எழுப்பப்பட்டு ஒன்று சேர்க்கப்படுவதும் உன்னிடமே!) என்றும் மாலையில் 'அல்லாஹும்ம பிக அம்ஸைனா, வபிக அஸ்பஹ்னா, வபிக நஹ்யா வபிக நமூது வஇலைகல் மஸீர்' (இறைவா! உன்னைக் கொண்டே நாம் மாலைப் பொழுதை அடைந்தோம், உன்னைக் கொண்டே நாம் காலைப் பொழுதையும் அடைவோம், மேலும் உன்னைக் கொண்டே நாம் உயிர்பெற்றோம்,

உன்னைக் கொண்டே நாம் மரணிப்போம், மேலும் நாம் இறுதியாக ஒதுங்குவதும் உன்னிடமே!)என்றும் கூறுவார்கள்.

'அஸ்பஹ்னாவஅஸ்பஹல்முல்குலில்லாஹி, வல்ஹம்து லில்லாஹி, லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர். ரப்பி அஸ்அலுக கைர மாபீ ஹாதல் யவ்மி வ கைர மா பஃதஹு, வஅஊது பிக மின் ஷர்ரி மாபீ ஹாதல் யவ்மி வ ஷர்ரிமா பஃதஹு, ரப்பி அஊது பிக மினல் கஸலி வஸுஇல் கிபரி, ரப்பி அஊது பிக மின் அதாபின் பின்னாரி, வஅதாபின் பில் கப்ரி'. (நாங்கள் காலைப் பொழுதை அடைந்து விட்டோம். காலை நேரத்து ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு நிகரானவன் யாருமில்லை. அவனுக்கே ஆட்சி. புகழும் அவனுக்கே. அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன். இறைவா! இந்த காலையின் நன்மையையும், அதன் பின்னர் வரும் நன்மையையும் உன்னிடம் வேண்டுகிறேன். இந்த காலையின் தீங்கை விட்டும் அதன் பின்னர் வரும் தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். சோம்பலை விட்டும், மோசமான முதுமையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். என் இறைவா! நரகின் வேதனையை விட்டும், மண்ணறையின் வேதனையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்).

*‘அஸ்பஹ்னா அலா பித்ரதில் இஸ்லாம், வகலிமதில் இஃலாஸ், வதீனி நபிய்யினா முஹம்மத் (ஸல்), வமில்லதி அபீனா இப்ராஹீம ஹனீபன் முஸ்லிமன் வமா கான மினல் முஷ்ரிகீன்’. (நாம் இஸ்லாம் மார்க்கத்தையும், ஏகத்துவக் கலிமாவையும், எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுடைய மார்க்கத்தையும், எங்கள் தந்தை இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தையும் ஏற்றவர்களாக காலைப் பொழுதை அடைந்துள்ளோம். அவர் (இப்ராஹீம் நபி) உண்மையான மார்க்கத்தின் பால் சாய்ந்தவராகவும், இறைவனுக்குக்கீழ்படிந்தவர்களாகவும் இருந்தார். அவர் இணைவைப்பாளர்களில் ஒருவராக இருக்கவில்லை.*

*மாலையில் மேற்கண்ட இரு துஆக்களிலும் அஸ்பஹ்னா என்பதற்குப் பதிலாக அம்ஸைனா எனச் சேர்த்து நபியவர்கள் ஓதுவார்கள்.*

*பின்வரும் துஆவை நபியவர்கள் ஓதாமல் விடவே மாட்டார்கள். ‘அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் அஃப்வ வல் ஆஃபியத பித் துன்யா வல் ஆல்கிரா. அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் அஃப்வ வல் ஆஃபியத பீ தீனீ, வதுன்யாய வஅஹ்லீ வமாலீ. அல்லாஹும்மஸ்துர் அவ்ராதீ வஆமின் ரவ்ஆதீ, அல்லாஹும்மஹ்ஃபழ்னீ மின் பய்ன யதய்ய வமின் கல்ஃபீ வஅன் யமீனீ வஅன் ஷிமாலீ, வமின் ஃபவ்கீ, வஅஊது பிஅழமதிக அன் உ( g)க்தால மின்தஹ்தீ’. (இறைவா! உன்னிடம் ஈருலகின் நலனையும் ஆரோக்கியத்தையும் வேண்டுகின்றேன். இறைவா! எனது மார்க்கத்திலும், எனது உலக வாழ்விலும், எனது*

*குடும்பத்திலும், எனது உடமையிலும் மன்னிப்பையும் நலனையும் உன்னிடம் வேண்டுகின்றேன். இறைவா! எனது குறைகளை மறைப்பாயாக!, என் அச்சங்களை நீக்கி எனக்கு அமைதி தருவாயாக! இறைவா! எனக்கு முன்பிருந்தும், பின்னாலிருந்தும், எனது வலது புறமிருந்தும் இடது புறமிருந்தும் எனக்கு மேலிருந்தும் எனக்குப் பாதுகாப்பு அளிப்பாயாக! கீழே இருந்தும் எதிர்பாராத விதமாக நான் தாக்கப்படுவதிலிருந்தும் உனது கண்ணியத்தைக் கொண்டு நான் பாதுகாப்புத் தேடுகிறேன்).*

*'அல்லாஹும்ம ஆஃபினீ பீ பதனீ, அல்லாஹும்ம ஆஃபினீ பீ ஸம்ஈ, அல்லாஹும்ம ஆஃபினீ பீ பஸரீ லா இலாஹ இல்லா அன்த். அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் குஃப்ரி வல் ஃபக்ரி வஅஊது பிக மின் அதாபில் கப்ரி லாஇலாஹ இல்லா அன்த'. (இறைவா! என் உடலில் ஆரோக்கியம் வழங்குவாயாக!, இறைவா! என் செவிப்புலனில் ஆரோக்கியம் வழங்குவாயாக!, இறைவா! என் பார்வையில் ஆரோக்கியம் வழங்குவாயாக! உண்மையான வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர யாருமில்லை. இறைவா! இறை நிராகரிப்பு, மற்றும் வறுமை ஆகியவற்றை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். மேலும் மண்ணறை வேதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத்த தேடுகின்றேன். உண்மையான வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர யாருமில்லை) என்று மூன்று தடவைகள் ஓதுவார்கள்.*

மேலும் ஸய்யிதுல் இஸ்திஃபார் எனப்படும் பிரதான

துஆவையும் ஓதுவார்கள். அது வருமாறு: ‘அல்லாஹும்ம அன்த ரப்பீ லாஇலாஹ இல்லா அன்த கலக்தனீ வஅன அப்துக வஅன அலா அஹ்திக வவஃதிக மஸ்ததஃது, அஊது பிக மின்ஷர்ரி மாஸனஃது, அபூஉ லக பிநிஃமதிக அலய்ய, வஅபூஉ லக பிதன்பீ ஃபக்பிஃர்லீ ஃபஇன்னஹு லா யஃக்பிருத் துனூப இல்லா அன்த’. (இறைவா! நீயே என் எஜமான். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. என்னை நீயே படைத்தாய். நான் உனது அடிமை. உனது உடன்படிக்கையின்படியும் வாக்குறுதியின் படியும் என்னால் இயன்ற வரை நடப்பேன். நான் செய்த தீமையை விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். நீ எனக்குச் செய்த அருளோடும் நான் செய்த பாவத்தோடும் உன்னிடம் மீள்கிறேன். எனவே என்னை மன்னிப்பாயாக! உன்னைத் தவிர யாரும் பாவங்களை மன்னிக்க முடியாது). இதனை மனஉறுதியுடன் காலையிலோ, மாலையிலோ ஓதி, அதே நிலையில் மரணித்தால் சுவனம் நுழைவார்கள் எனவும் கூறியுள்ளார்கள்.

மேலும் ஸூரதுல் இஃலாஸ் (குல்ஹுவல்லாஹு அஹத்), ஸூரதுல் பலக் (குல் அஊது பிரப்பில் பலக்), ஸூரதுந்நாஸ் (குல் அஊது பிரப்பிந்நாஸ்) ஆகிய ஸூராக்களை காலை, மாலையில் ஓதுவது அனைத்துக் கெடுதிகளுக்கும் போதுமானதாகும் என நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

‘பிஸ்மில்லாஹில்லதீ லா யழுர்ரு மஅஸ்மிஹீ ஷைஉன் பில் அர்ழி வலா பிஸ்ஸமாஇ, வஹுவஸ்

ஸமீஉல் அலீம்’. (அல்லாஹ்வின் பெயர் கொண்டு நான் ஆரம்பிக்கின்றேன். அவனுடைய பெயருடன் பூமியிலோ, வானத்திலோ எப்பொருளும் கெடுதி செய்திட முடியாது. அவன் யாவற்றையும் கேட்பவனும் அறிந்தவனுமாவான்) என்று மூன்று தடவை காலை, மாலையில் ஓதியவருக்கு தீங்கேதும் ஏற்படாதென நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு நபியவர்கள் பின்வரும் துஆவைக் கற்றுக் கொடுத்தார்கள்: ‘அல்லாஹும்ம ஆலிமல் ஃகைபி வஷ்ஷஹாததி, பாதிரஸ் ஸமாவாத்தி வல் அர்ளி, ரப்ப குல்லி ஷைஇன் வமலீகஹு, அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லா அன்த, அஊது பிக மின் ஷர்ரி நப்ஸீ வமின் ஷர்ரிஷ் ஷைத்தானி வஷிர்கிஹி, வஅன் அக்தரிஃப அலா நப்ஸீ ஸூஅன் அவ் அஜுர்ரஹூ இலா முஸ்லிம்’. (இறைவா! மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிபவனே! வானங்களையும், பூமியையும் படைத்தவனே! அனைத்துப் பொருட்களின் அதிபதியே! அரசனே! வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர யாருமில்லை. எனது மனோ இச்சையின் தீங்கை விட்டும் ஷைத்தானின் தீங்கை விட்டும், இன்னும் எனக்கு நான் தீங்கு செய்வதிலிருந்து, அல்லது எந்தவொரு முஸ்லிமுக்காவது அதை நான் இழுத்துச் செல்வதிலிருந்து உன்னிடமே பாதுகாப்புத் தேடுகிறேன்).

‘யா ஹய்யு! யா கய்யூம்! பிரஹ்மதிக அஸ்தகீஸு, ஃபஅஸ்லிஹ் லீ ஷஃனீ குல்லஹூ வலா கதில்னீ இலா நப்ஸீ தர்பத ஐன்’ (என்றும் ஜீவித்திருப்பவனே!,

அனைத்தையும் நிர்வகிப்பவனே!, உனது அருளைக் கொண்டு இரட்சிக்கத் தேடுகிறேன். என்னுடைய எல்லாக் கருமங்களையும் சீர்படுத்துவாயாக!. கண் இமைக்கும் நேரமாவது என்னை என் பொறுப்பில் விட்டுவிடாதே) எனும் துஆவை நபியவர்கள் தனது புதல்வி பாத்திமா (ரலி) அவர்களுக்கு போதித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் காலையிலும் மாலையிலும் நூறு முறை "ஸுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி" (அல்லாஹ் தூயவன் எனப் போற்றிப் புகழ்கிறேன்) என்று சொல்கிறாரோ அவர் கொண்டுவந்த (நல்லறத்)தைவிடச் சிறந்ததை வேறெவரும் மறுமைநாளில் கொண்டு வருவதில்லை; அவர் சொன்ன அளவுக்குச் சொன்னவரையும் அல்லது அதைவிடக் கூடுதலாகச் சொன்னவரையும் தவிர". கடல் நுரையளவு பாவமிருந்தாலும் அவை மன்னிக்கப் படுமெனவும் நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

'லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல்ஹம்து வஹுவ அலாகுல்லிஷைஇன் கதீர்' (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை, துணை எதுவுமில்லை, அரசாட்சி அனைத்தும் அவனுக்கே உரியது, இன்னும் புகழனைத்தும் அவனுக்கே உரியது, மேலும் அவன் அனைத்துப் பொருட்கள் மீதும் சக்தி வாய்ந்தவன்) என்று யார் ஒரு நாளில் நூறு முறை சொல்கிறாரோ அவருக்கு, அது பத்து அடிமைகளை விடுதலை

செய்தததற்குச் சமமாகும். மேலும், அவருக்கு நூறு நன்மைகள் எழுதப்படும். அவரிடமிருந்து (அவர் செய்த) நூறு தவறுகள் அழிக்கப்படும். அந்த நாளின் மாலை நேரம் வரும்வரை ஷைத்தானிலிருந்து (பாதுகாக்கும்) அரணாகவும் அது அவருக்கு இருக்கும். அவர் புரிந்த இந்த நற்செயலை விடச் சிறந்ததை வேறு யாரும் செய்திட முடியாது; ஒருவர் இதைவிட அதிகமான (தடவைகள் இதை ஓதினால், அல்லது மிக முக்கியமான ஒரு) நற்செயல் புரிந்தால் தவிர என நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

மேலும் காலையில் 10 தடவைகளும், மாலையில் 10 தடவைகளும் என் மீது ஸலவாத் சொல்பவருக்கு மறுமையில் எனது பரிந்துரை கிடைக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## காலையில் மாத்திரம் ஓதும் துஆ

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: காலையில் 'ரழீது பில்லாஹி ரப்பன், வபில் இஸ்லாமி தீனன், வபி முஹம்மதின் நபிய்யா' (அல்லாஹ்வை இரட்சகனாகவும், இஸ்லாத்தை (உண்மை) மார்க்கமாகவும், முஹம்மத் (ஸல்) அவர்களை நபியாகவும் பொருந்திக் கொண்டேன்) எனக் கூறுபவரின் கையைப் பிடித்து, சுவனம் நுழையும் வரை கொண்டு செல்ல நான் பொறுப்பாளனாவேன்.

## மாலையில் மாத்திரம் ஓதும் துஆ

மாலையில் ‘அஊது பிகலிமாதில்லாஹித் தாம்மாதி மின் ஷர்ரி மா கலக்’ (அல்லாஹ்வுடைய பரிபூரணமான வார்த்தைகள் மூலம் அவனது படைப்பினங்களின் தீங்கை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்) என மூன்று தடவை கூறியவரை (பாம்பு, தேள் போன்ற) விஷப்பிராணிகள் தீண்டமாட்டாது என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

# உண்ணல், பருகலில் நபிவழி

நபி (ஸல்) அவர்கள் இருக்கும் உணவைத் திருப்ப மாட்டார்கள், இல்லாததை சிரமப்பட்டுத் தேட மாட்டார்கள். இயற்கையாக அன்னார் விரும்பாததைத் தவிர அனுமதிக்கப்பட்ட நல்ல உணவுகளில் எது அவர்களுக்கு முன் வைக்கப் பட்டாலும் உண்பார்கள். அவ்வாறு விரும்பாததை பிறருக்குத் தடை செய்யாமல் தான் மாத்திரம் தவிர்ந்து கொள்வார்கள். அவர்கள் எந்த உணவையும் குறை கூறியதில்லை. விரும்பினால் உண்ணுவார்கள். இல்லாவிடில் விட்டு விடுவார்கள். பிறர் தனக்கு ஏதாவது மனமுவந்து அன்பளிப்பாகத் தந்தால் அதனை உண்டு விட்டு, அவருடைய உள்ளம் குளிரும் விதத்தில் பாராட்டுவார்கள். நபியவர்கள் கிடைத்ததை உண்பார்கள். ஏதும் கிடைக்காவிட்டால் பொறுமையாக இருப்பார்கள். சில வேளை பட்டினியின் காரணமாக வயிற்றில் கற்களைக் கட்டிக் கொண்டும் இருப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் தமது வயிறு நிரம்பும் அளவுக்கு மட்டமான பேரீச்சம் பழம்கூட கிடைக்காத நிலையில் ஒரு நாள் முழுவதும் சுருண்டு கிடப்பார்கள். தொடர்ந்து

இரண்டு மாதங்களாக அன்னாரின் வீட்டில் அடுப்பு எரியாமல் கூட இருந்துள்ளது. வீட்டினுள் நுழைந்தால் மனைவியிடம் ஏதும் உண்ண இருக்கின்றதா? என வினவுவார்கள். இல்லை என்று கூறப்பட்டால் 'நான் நோன்பிருக்கின்றேன்' எனக் கூறிக்கொள்வார்கள். அன்னார் வாரத்தில் திங்கள், வியாழனிலும், மாதத்தில் மூன்று தினங்களும் நோன்பிருப்பார்கள்.

உண்ண ஆரம்பிக்கும் போது 'பிஸ்மில்லாஹ்' எனக் கூறுவார்கள். முடிந்ததும் பின்வரும் துஆவைக் கூறி அல்லாஹ்வைப் புகழ்வார்கள்: 'அல்ஹம்து லில்லாஹி கஸீரன் தய்யிபன் முபாரகன் பீஹி (g)கைர மக்பிய்யின் வலா முவத்தஇன் வலா முஸ்தக்னன் அன்ஹு ரப்பனா'. (தூய்மையான, பாக்கியம் நிறைந்த அதிக அளவிலான புகழ் அல்லாஹ்வுக்கே. அவனது அருட்கொடை மறுக்கப்படத்தக்கதல்ல. நன்றி மறக்கப்படுவதுமன்று. அது தேவையற்றதுமல்ல எங்கள் இரட்சகனே!). மேலும் நபியவர்கள் கூறினார்கள்: உணவு உட்கொண்ட பின் 'அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனீ ஹாதா வரஸகனீஹி மின் (g)கைரி ஹவ்லின் மின்னீ வலா குவ்வா' (எனக்கு இந்த உணவை அளித்து, என்னிடமிருந்து எவ்வித முயற்சியும் சக்தியுமின்றியே இதனை எனக்கு வழங்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) எனக் கூறுபவருடைய பாவங்கள் மன்னிக்கப் படும்.

உண்டு முடிந்தவுடன் கழுவ முன் விரல்களை சூப்பிக் கொள்வார்கள். வலதால் உண்ணுமாறு பணித்த அன்னார் ஷைத்தான்தான் இடது கையால் உண்ண,

பருகச் செய்கின்றான் எனவும் கூறினார்கள். மேலும் சாய்ந்த நிலையில் உண்ண மாட்டார்கள். தரையில்தான் பெரும்பாலும் அன்னாருக்கு உணவு பரிமாறப்படும். நின்ற நிலையில் பருகுவதைத் தடுத்தார்கள். பெரும்பாலும் உட்கார்ந்துதான் பருகுவார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் பருகும்போது மூன்று முறை மூச்சு விட்டு(ப் பருகி)வந்தார்கள். மேலும், "இதுவே நன்கு தாகத்தைத் தணிக்கக்கூடியதும் (உடல்நலப்) பாதுகாப்பிற்கு ஏற்றதும் அழகிய முறையில் செரிக்கச் செய்யக்கூடியதும் ஆகும்" எனவும் கூறினார்கள். தனக்கு உணவு, பானங்கள் வழங்கியவருக்கு 'அல்லாஹும்ம அத்இம் மன் அத்அமனா, வஸ்கி மன் ஸகானா' (இறைவா! எமக்கு உணவளித்தவருக்கு நீயும் உணவளி, எமக்கு பானம் வழங்கியவருக்கு நீயும் பானம் வழங்கு என்று பிரார்த்திப்பார்கள். தனக்கு விருந்தளித்தவருக்குப் பின்வருமாறு பிரார்த்திப்பார்கள்: 'அல்லாஹும்ம பாரிக் லஹும் பீமா ரஸக்தஹும் வஃக்பிர் லஹும் வர்ஹம்ஹும்'. (இறைவா! இவர்களுக்கு நீ வழங்கியதில் பரகத் செய்வாயாக. இவர்களை மன்னிப்பாயாக! இவர்களுக்கு கருணை காட்டுவாயாக).

# உடை, நடை, பிரயாணத்தில் நபிவழி

நபி (ஸல்) அவர்கள் உடை அணியும் போது ‘அல்ஹம்து லில்லாஹில்லதீ கஸானீ ஹாதா வரஸகனீஹி மின் (g)கைரி ஹவ்லின் மின்னீ வலா குவ்வா’ (எனக்கு இந்த ஆடையை அளித்து, என்னிடமிருந்து எவ்வித முயற்சியும் சக்தியுமின்றியே இதனை எனக்கு வழங்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) எனும் துஆவை ஓதுவார்கள். மேலும் புத்தாடை அணிந்தால் அதன் பெயரைக் (தலைப்பாகை, மேற்சட்டை, வேஷ்டி) கூறி ‘அல்லாஹும்ம லகல் ஹம்து அன்த கஸவ்தனீஹி அஸ்அலுக ஃகரஹூ வஃகைர மா ஸுனிஅ லஹூ, வஅஊது பிக மின் ஷர்ரிஹீ வஷர்ரி மா ஸுனிஅ லஹூ’ (இறைவா! இதனை எனக்கு அளித்த உனக்கே எல்லாப் புகழும், இதிலிருக்கும் நலவையும், எதற்காக இது உருவாக்கப் பட்டதோ அதிலுள்ள நலவையும் உன்னிடம் வேண்டுகின்றேன். மேலும் இதிலுள்ள தீங்கையும், எதற்காக இது உருவாக்கப் பட்டதோ அதிலுள்ள தீங்கையும் விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்) எனக் கூறுவார்கள்.

தற்காலத்தில் ஸவ்ப் எனப்படும் நீண்ட ஆடை, மற்றும் சிவப்புக் கோடுகள் இடப்பட்ட யமன் தேசத்திலிருந்து கொண்டுவரப்படும் பருத்தியிலான மேற்சட்டையும் நபியவர்களின் விருப்பத்திற்குரிய ஆடைகளாகும். நிறங்களில் வெண்ணிற ஆடையே அன்னாருக்கு மிகவும் பிடித்தமானது. உங்கள் ஆடைகளில் சிறந்தது வெண்ணிற ஆடையாகும், அதே நிறத்திலேயே உங்களில் மரணித்தவர்களையும் கபனிடுங்கள் என நபியவர்கள் கூறினார்கள். தனிச்சிவப்பு நிற ஆடை அணிவதை வெறுத்து, தடுத்துமுள்ளார்கள். பெண்ணாடை அணியும் ஆணையும், ஆணாடை அணியும் பெண்ணையும் நபியவர்கள் சபித்துள்ளார்கள். குங்குமச் சாயமிடப்பட்ட இரு ஆடைகளை அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அவர்களிடம் கண்ட போது 'இது இறைநிராகரிப்பாளர்களுடைய ஆடை முறை, நீர் அவற்றை அணிய வேண்டா'மென நபியவர்கள் கூறினார்கள். மேலும் பிரபலத்தை விரும்பி பிரத்தியேகமாக அணியும் ஆடைகளையும் தடுத்துள்ளார்கள். ஆண்கள் பட்டு, தங்கம் அணிவதையும் தடுத்துள்ளார்கள். பெருமைக்காக உட்பட பொதுவாகவே ஆண்கள் கரண்டைக் காலுக்குக் கீழால் ஆடையணிவதைத் தடுத்துள்ளார்கள். 'கீழாடையில் கரண்டைக் காலைவிட மேலதிகமாக இறங்கியது நரகிற்கே சொந்தமாகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நபியவர்களின் கீழாடை கெண்டைக்காலின் பாதி வரையிலேயே இருக்கும்.

மேற்சட்டை அணியும் போது நபியவர்கள் வலதையே முற்படுத்துவார்கள். 'நீங்கள் உடையணிந்தாலும் வுழூச் செய்தாலும் வலதிலிருந்து ஆரம்பியுங்கள்' எனக் கூறியுள்ளார்கள். ஆடை கலையும் போது இடதை முற்படுத்துவார்கள். அதேபோன்று தான் பாதணிகள் அணியும் போதும். 'முதலில் அணியப்படக் கூடியதாகவும், இறுதியாகக்கலற்றப்படக்கூடியதாகவும் வலது கால் இருக்கட்டும்' என நபியவர்கள் கூறியுள்ளார்கள். ஒரு காலில் மாத்திரம் பாதணி அணிந்து கொண்டு நடப்பதையும் தடுத்துள்ளார்கள். சிலவேளை பாதணியின்றியும் நடந்து செல்வார்கள். அவர்கள் நடந்தால் பள்ளத்தில் நடப்பது போன்று பிடிப்புடன் நடப்பார்கள்.

நபி (ஸல்) அவர்கள் வாகனத்தில் ஏறும் போது 'பிஸ்மில்லாஹ்' என்றும், ஏறி அமர்ந்ததும் 'அல்ஹம்துலில்லாஹ்' என்றும் கூறுவார்கள். பின்னர்: 'ஸுப்ஹானல்லதீ ஸக்கர லனா ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன். வஇன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்'. (எங்களுக்கு இதை வசப்படுத்தித் தந்தவன் தூயவன். நாங்கள் இதன் மேல் சக்தி பெற்றவர்களாக இருக்கவில்லை. மேலும் நாங்கள் எங்கள் இறைவனிடமே திரும்பிச் செல்பவர்கள்) என்று கூறுவார்கள். பின்பு 'அல்ஹம்துலில்லாஹ்', 'அல்லாஹு அக்பர்' என்பவற்றை மும்மூன்று தடவைகள் கூறுவார்கள். பின்பு 'அல்லாஹும்ம இன்னீ ளலம்து நப்ஸீ ஃபக்ஃபிர் லீ ஃபஇன்னஹு லா

*யக்ஃபிருத் துனூப இல்லா அன்த' (இறைவா! நானே எனக்கு அநீதியிழைத்துக் கொண்டேன். எனவே என்னை மன்னித்து விடு, நிச்சயமாக பாவங்களை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை) எனக் கூறுவார்கள்.*

# நபியவர்களின் நற்பண்புகள், மக்களுடன் நடந்து கொள்ளும் முறை

நபி (ஸல்) அவர்கள் மக்களில் மிக அழகானவர்களாகவும், அழகிய குணமுடையவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் தீயவராகவோ, தீய பேச்சு பேசுபவர்களாகவோ, சந்தைகளில்சத்தமிடக்கூடியவராகவோஇருக்கவில்லை. கெடுதிக்குக் கெடுதி மூலம் பழிதீர்க்க மாட்டார்கள். மாறாக மன்னித்து விடுவார்கள். அல்லாஹ்வின் தடைகள் மீறப்படாமலிருக்கும் வரை தனக்கு ஏற்பட்ட எந்த அநீதிக்கும் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். அவ்வாறு மீறப்படும் பட்சத்தில் அதிக கோபப்படக் கூடியவராக அன்னார்தான் இருப்பார்கள். இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யுமாறு கூறப்பட்டால் பாவமாக இல்லாத பட்சத்தில் அவ்விரண்டில் இலகுவானதையே தேர்ந்தெடுப்பார்கள். அறப்போரிலே தவிர நபியவர்கள் தனது கையினால் எந்தவொரு அடிமை, பெண், பணியாள் யாருக்கும் அடித்ததில்லை. அனஸ் (ரலி) கூறுகின்றார்: நான் நபி (ஸல்) அவர்களிடம் 10 வருடங்கள் பணியாளாக

இருந்துள்ளேன். ஒரு தடவை கூட என்னைப் பார்த்து 'சீ' எனக் கூறியதில்லை. நான் செய்த காரியத்தைப் பார்த்து ஏன் செய்தீர் என்றோ, செய்யாத ஒன்றை ஏன் செய்ய வில்லை என்றோ கேட்டதில்லை.

நபி (ஸல்) அவர்கள் ஒருவருடன் கைலாகு செய்தால் அந்நபர் தனது கையை விடுவித்துக்கொள்ளும் வரை நபியவர்கள் கையை எடுக்க மாட்டார்கள். என்னைத்தான் நபியவர்கள் அதிகமாக நேசிக்கின்றார்கள் என ஒருவர் நினைக்கும் அளவு அன்னார் மக்களுடன் நேரடியாக முகம் பார்த்தே பேசுவார்கள். நான் இஸ்லாத்தை ஏற்றதிலிருந்து நபியவர்களை புன்னகைத்தவராகவே நான் கண்டுள்ளேன் என ஜரீர் பின் அப்துல்லாஹ் (ரலி) கூறினார்கள். நபியவர்களை விட அதிக புன்முறுவல் பூக்கக்கூடிய யாரையும் நான் கண்டதில்லை என அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

நபி (ஸல்) அவர்களது பேச்சை ஒருவர் எண்ண முடியுமானளவு நிதானமாகவே பேசுவார்கள். செவிமடுப்போர் கிரகித்துக் கொள்ளும் வகையில் பேச்சு தெளிவாக இருக்கும். தொடர்ந்து இடைவெளி விடாமல் பேசிக் கொண்டே இருக்க மாட்டார்கள். அன்னாரது பேச்சைக் கிரகித்துக் கொள்வதற்காக ஒரு விடயத்தை மூன்று தடவைகள் கூறுவார்கள். ஒருவர் தவறு செய்வதைக் கேள்விப் பட்டால் அவரது பெயரைக் குறித்துக் கூறாமல் 'சிலர் இவ்வாறு செய்கின்றார்களே' என்பதாகத் தான் கூறுவார்கள். சகல நேரங்களிலும் அல்லாஹ்வை நினைவுகூர்பவராக நபியவர்கள் இருப்பார்கள். ஒரே

*அமர்வில் 100 தடவைகள் பாவமன்னிப்புக் கேட்டதை தோழர்கள் கணித்துள்ளார்கள். 'இறைவா! என்னை மன்னித்து, எனக்கு பாவமீட்சி வழங்குவாயாக. நிச்சயமாக நீ தான் பாவமீட்சி வழங்குபவன், கருணையாளன்' என நபியவர்கள் பிரார்த்திப்பார்கள். மேலும் கூறினார்கள்: 'நிச்சயமாக நான் தினமும் 70 தடவைகளுக்கு மேல் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்டு மீள்கின்றேன்'. அவர்கள் அதிகமாகக் கேட்கும் பிரார்த்தனைகள்:*

*'ரப்பனா ஆதினா ஃபித்துன்யா ஹஸனதன் வஃபில் ஆஃகிரதி ஹஸனதன் வகினா அதாபந் நார்' (எங்கள் இறைவா! இவ்வுலகிலும் எங்களுக்கு நன்மையை வழங்குவாயாக! மறுமையிலும் நன்மையை (வழங்குவாயாக!) நரக வேதனையிருந்து எங்களைக் காப்பாயாக!).*

*'யா முகல்லிபல் குலூப் ஸப்பித் கல்பீ அலா தீனிக' (உள்ளங்களைப் பிரட்டக் கூடியவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் நிலைத்திருக்கச் செய்வாயாக).*

*'ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லா அன்த அஸ்தக்ஃபிருக வஅதூபு இலைக' (இறைவா! நீ தூயவன். உன்னைப் புகழ்கிறேன். வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர யாருமில்லை. உன்னிடமே பாவ மன்னிப்புத் தேடுகிறேன். உன்னிடமே மீள்கிறேன்) எனும் துஆவின் மூலமே நபியவர்கள் சபைகளை முடிப்பார்கள்.*

*அறையில் முடங்கியிருக்கும் கன்னிப் பெண்களை விட*

நபியவர்கள் அதிக வெட்கமுள்ளவர்களாக இருந்தார்கள். அன்னார் ஒன்றை வெறுத்தால் அவர்களுடைய முகத்திலேயே அறியலாம்.

மக்களில் அதிக கொடைவள்ளலாக நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள். எது கேட்க்கப்பட்டாலும் இல்லை எனக்கூறியதில்லை. வறுமையை அஞ்சாதவர்கள் போன்றுதான் நபியவர்கள் தர்மம் செய்வார்கள். 'உஹுது மலை அளவிற்கு என்னிடம் தங்கம் இருந்தாலும் அதிலிருந்து சிறிது என்னிடம் (எஞ்சி) இருக்கும் நிலையில் என் மீது மூன்று நாட்கள் கழிவது கூட எனக்கு மகிழ்ச்சி அளிக்காது; கடனை அடைப்பதற்காக நான் (அதிலிருந்து) எடுத்து வைக்கும் சிறிதளவு (தங்கத்தைத்) தவிர' என நபியவர்கள் கூறினார்கள்.

மேலும் நபியவர்கள் அதிக நிதானமுள்ளவர்களாக இருந்தார்கள். கழுத்திலே அடையாளம் ஏற்படுமளவு ஒருவர் தனது மேலங்கியைப் பலமாக இழுத்து அநாகரிகமான முறையில் பலவந்தமாகக் கேட்ட போதும் நபியவர்கள் திரும்பி அவரைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு அவர் கேட்பதைக் கொடுக்குமாறும் (தோழர்களுக்குப்) பணிப்பார்கள்.

மேலும் அன்னார் அதிக துணிவுள்ள வீரராக இருந்தார்கள். நபித்தோழர்களில் பலமுள்ள வீரராகக் கருதப்படும் பர்ராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்களே பின்வருமாறு கூறுகின்றார்கள்: 'அல்லாஹ்வின் மீதாணையாக! போர் (உச்ச கட்டமடைந்து) சிவந்து (கனன்று) கொண்டிருந்த

போது நபியவர்களையே கேடயமாக்கி நாங்கள் தப்பித்துக் கொண்டிருந்தோம். நபியவர்கள் எதிரிகளுக்கு மிக நெருக்கமாக இருப்பதனால் எங்களில் வீரர்கள் கூட அன்னாருக்கு நெருக்கமாக (அவர்களுக்குப் பின்னாலேயே) நின்று கொண்டிருந்தனர்'.

தோழர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் நபியவர்கள் மிக விரைவாக செயற்படுவார்கள். பிலால் (ரலி) போன்ற சிலருடைய கடன்களையும் அடைத்து விடுவார்கள். திருமணமாகாதவருக்கு அதற்குரிய ஏற்பாடுகளைசெய்துகொடுப்பார்கள். ஒருயூதனிடத்தில் ஜாபிர் (ரலி) அவர்கள் வாங்கிய கடனின் தவணையைப் பிற்போட மூன்று முறை அவனிடம் பரிந்துரைக்கச் சென்றார்கள். தம் கணவர்களைப் பற்றி முறைப்பட பெண்கள் வந்தால் அதற்கும் செவி சாய்ப்பார்கள். ஒரு மனிதர் தனது ஒட்டகம் தன்னை சிரமப்படுத்துவதாக முறைப்பட்டு வந்த போது நபியவர்கள் அந்நபருடன் அந்த ஒட்டகத்திடம் சென்றார்கள். அதுவோ நபியிடம் போதிய ஆகாரமின்மை, அதிக வேலைப் பளு என்பவற்றை முறையிட்டது. எனவே வாய்பேச முடியாத ஜீவராசிகள் கூட தமக்கு நீதம் கிடைக்க நபியிடத்தில் முறைப்படக் கூடியதாக இருந்தன. 'அகிலத்தாருக்கு அருட்கொடையாகவே அன்றி நாம் உம்மை அனுப்பவில்லை' என அல்லாஹ் முற்றிலும் உண்மையே கூறியுள்ளான்.

நபி(ஸல்) அவர்கள் மிகவும் பணிவுள்ளவராக இருந்தார்கள். விதவை மற்றும் ஏழைகளுடன் சென்று அவர்களுடையை

தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதைக் கூட தரக்குறைவாக நினைக்க மாட்டார்கள். எனக்கு உம்மிடம் ஒரு தேவை உள்ளது என ஒரு பெண் கூறிய நேரத்தில் 'நீர் விரும்பிய பாதையைக் காட்டும், உமது வேலையைச் செய்து தருகின்றேன்' எனக் கூறி, அப்பெண்ணுடன் சென்று அவளுக்குப் பணிவிடை செய்து விட்டு வந்தார்கள். வாற்கோதுமை உரொட்டி மற்றும் (நீண்ட காலம் இருந்ததன் காரணமாக) வாசனை நீங்கிய உருகிய கொழுப்புக்காக விருந்துக்கு அழைக்கப்பட்டாலும் அதற்கும் பதிலளிப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஓர் ஆட்டின் விலாவை அல்லது காலை அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளும்படி நான் அழைக்கப்பட்டாலும் நான் ஏற்றுக் கொள்வேன். எனக்கு ஓர் ஆட்டின் விலா அல்லது கால் விருந்தளிக்கப்பட்டாலும் சரி, நான் அதற்கும் பதிலளிப்பேன். நபியவர்களுடைய ஒரு போர்க்கவசம் யூதன் ஒருவனிடம் அடைமானம் வைக்கப்பட்டிருந்தது. அன்னார் மரணிக்கும் வரை அதனை மீட்டெடுக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

நபியவர்கள் சிறுவர்களுடன் இரக்கமாக நடந்து கொள்வார்கள். அவர்களுடன் பரிகாசிப்பார்கள். அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : 'நபி (ஸல்) அவர்களை விட அதிகமாகத் தம் குடும்பத்தாரை நேசிக்கும் ஒருவரை நான் பார்த்ததில்லை'. சிறார்களைத் தாண்டிச் செல்லும் போது அவர்களுக்கும் ஸலாம் கூறுவார்கள்.

# நபியவர்களின் வீட்டு வாழ்க்கையும் உறக்க முறையும்

நபி (ஸல்) அவர்களின் வீடு களி மண்ணினாலும், அதன் கூரை ஈத்தம் ஓலையினாலுமே அமைந்திருந்தது. அது மிக ஒடுக்கமானதாக இருந்தது. இரவுத் தொழுகையில் ஸுஜூது செய்யும் போது மனைவி ஆஇஷா (ரலி) அவர்களது காலைத் தொடுவார்கள். அன்னையர் காலை மடித்துக் கொண்டு, ஸுஜூதிலிருந்து எழுந்ததும் நீட்டிக் கொள்வார்கள். வீட்டினுள் நுழைபவர் தனது கையினாலேயே அதன் கூரையைத் தொடுமளவிற்கு இருந்தது. நபியவர்கள் வீட்டினுள் சென்றதும் முதலில் மிஸ்வாக் செய்வார்கள். வீட்டிலுள்ளோருக்கு ஸலாம் கூறுவார்கள். உறங்குவோரை எழுப்பாமல், விழித்திருப்போருக்குக் கேட்கக் கூறுவார்கள். வீட்டினுள் நுழையும் போது 'அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக ஃகைரல் மவ்லிஜி, வஃகைரல் மஃக்ரஜி பிஸ்மில்லாஹி வலஜ்னா, வஅலல்லாஹி ரப்பினாதவக்கல்னா' (இறைவா! சிறந்த பிரவேசத்தையும், சிறந்த வெளியேறுமிடத்தையும் உன்னிடம் வேண்டுகின்றேன். அல்லாஹ்வின் திருப் பெயர் கூறி பிரவேசித்தோம். எங்கள் இரட்சகனான

அல்லாஹ்வின்மீதே முழுவதும் பொறுப்புச்சாட்டினோம்) என்று ஓதுமாறு கூறியுள்ளார்கள். உள் நுழையும் போதும், உணவு உட்கொள்ளும் போதும் அல்லாஹ்வின் பெயர் கூறப் படாவிட்டால் அவர்களது இராப்போசணத்திலும், தங்குமிடத்திலும் ஷைத்தான் பங்கெடுப்பதாகவும் கூறியுள்ளார்கள். மேலும் வீட்டிலிருந்து வெளியேறும் போது 'பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி, அல்லாஹும்ம இன்னா நஊது பிக மின் அன் நஸில்ல அவ் நளில்ல அவ் நள்ளிம அவ் நுள்லம அவ் நஜ்ஹல அவ் யுஜ்ஹல அலய்னா' (அல்லாஹ்வின் பெயரால் அவன் மீது பொறுப்புச் சாட்டியவனாக (வெளியேருகிறேன்). எங்கள் இறைவா! நாம் சறுகி விடாமலும், வழி தவறி விடாமலும், அநீதி இழைக்காமலும், அநீதி இழைக்கப்படாமலும், மூடனாகாமலும், (பிறரை) மூடராக்காமலும் இருக்க உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறோம்) என்று கூறுவார்கள். மேலும் கூறினார்கள்: 'பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்' (அல்லாஹ்வின் பெயரால் அவன்மீது பொறுப்புச் சாட்டியவனாக (வெளியேருகிறேன்). நன்மை செய்ய சக்தியோ பாவத்திலிருந்து மீள்தலோ அல்லாஹ்வைக் கொண்டே தவிர நடைபெற மாட்டாது.) என்று கூறினால் அச்சந்தர்ப்பத்தில், "நீ நேர்வழி காட்டப்பட்டு விட்டாய், நீ போதுமாக்கிக் கொள்ளப்பட்டு விட்டாய், நீ பாதுகாக்கப்பட்டு விட்டாய்" என்று கூறப்படும். அப்போது ஷைத்தான் அவரை விட்டும் தூரமாகி விடுகின்றான்'.

நபியவர்கள் தனது வீட்டில் என்ன செய்து கொண்டிருப்பார்கள்? என ஆஇஷா (ரலி) அவர்களிடம் வினவப்பட்ட போது 'வீட்டுவேலைகளில் பங்கெடுத்துக் கொண்டிருப்பார்கள். அதான் கூறப்பட்டதும் தொழுகைக்காக வெளியேறிச் சென்று விடுவார்கள்' எனக் கூறினார்கள். மேலும், 'அவர் ஒரு சாதாரண மனிதராகவே இருந்தார்கள். தனது ஆடையிலுள்ள பேண்களைத் தானே தேடி நீக்கிவிடுவார்கள். ஆட்டிலிருந்து தானே பால் கறந்து கொள்வார்கள். தனது வேலையைத் தானே செய்து கொள்வார்கள்' எனவும் அன்னையவர்கள் கூறினார்கள். மனைவியரிடத்தில் மிகச் சிறந்தவராகவும் அழகாக நடக்கக் கூடியவராகவும் இருந்தார்கள். இரவு நேரங்களில் அன்னை ஆஇஷாவின் நீண்ட பேச்சுக்களை இடைநிறுத்தாமல் செவிமடுத்துக் கொண்டே இருந்து விட்டு, பின்பு அன்னையவர்களுடன் இதமாகப் பேசுவார்கள். அன்னையவர்களுடன் ஓட்டப்பந்தயம் செய்து ஒரு தடவை அன்னையவர்களும், மறு தடவை நபியவர்களும் வென்றார்கள். எத்யோப்பிய சிறுவர்கள் பெருநாள் தினத்தன்று விளையாடியதைப் பார்க்க ஆஇஷா (ரலி) அவர்கள் விரும்பிய போது நபியவர்களுக்குப் பின்னாலிருந்து சடைவு ஏற்படும் வரை பார்க்க விட்டார்கள். நபியவர்கள் இலகிய மனம்படைத்தவர்களாக இருந்தார்கள். ஆஇஷா (ரலி) அவர்கள் ஒன்றை ஆசைப்பட்டபோது, அவரது வழியிலேயே அவரை விட்டு விட்டார்கள். அன்னாரின் மற்றுமொரு மனைவி ஸபிய்யா (ரலி) அவர்கள்

ஒட்டகத்தில் ஏறுவதற்காக நபியவர்கள் அதனருகில் உட்கார்ந்து அவர்களின் சங்கை மிக்க காலில் பாதம் வைத்து ஏற துணை புரிந்தார்கள். மனைவிமார்களுக்கு மத்தியில் ஏற்படும் உரோசத்தின் பின்விளைவுகளைப் பொறுத்துக் கொள்வார்கள். மென்மையாக நடந்து கொள்வார்கள்.

நபி (ஸல்) அவர்கள் உறங்கும் விரிப்பு, மற்றும் தலையணை, ஈச்சநாரால் நிரப்பப்பெற்ற பதனிடப்பட்ட தோலால் அமைந்திருந்தது. தனது முதுகில் அடையாளம் ஏற்படுமளவு கனமான பாயிலும் உறங்கியுள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் தமது படுக்கைக்கு (உறங்கச்) சென்றால் ஒவ்வோர் இரவிலும் தமது உள்ளங்கைகளை இணைத்து, அதில் குல் ஹுவல்லாஹு அஹத்', குல் அஊது பிரப்பில் ஃபலக்', குல் அஊது பிரப்பின்னாஸ்' ஆகிய (112, 113, 114) அத்தியாயங்களை ஓதி ஊதிக் கொள்வார்கள். பிறகு தம் இரு கைகளால் (அவை எட்டும் அளவிற்கு) தமது உடலில் இயன்ற வரையில் தடவிக் கொள்வார்கள். முதலில் தலையில் ஆரம்பித்து, பிறகு முகம், பிறகு தம் உடலின் முற்பகுதியில் கைகளால் தடவிக் கொள்வார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள்.

மேலும் “அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனா வ ஸகானா வ கஃபானா வ ஆவானா. ஃபகம் மிம்மன் லா காஃபிய லஹு, வலா முஃவிய”

(அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே

நமக்கு உணவளித்தான்; குடிநீர் வழங்கினான்; (நம் தேவைகளை நிறைவேற்றி) போதுமான அளவுக்குக் கொடுத்தான்; (தங்க இடமளித்து) தஞ்சமளித்தான். ஆனால், போதுமாக்கி வைப்பதற்கோ தஞ்சமளிப்பதற்கோ ஆளில்லாமல் எத்தனையோ பேர் இருக்கின்றனர்.) என்றும் கூறுவார்கள்.

தூங்க ஆரம்பிக்கும் போது தனது வலது கையை வலது கன்னத்திற்குக் கீழ் வைத்து 'அல்லாஹும்ம கினீ அதாபக யவ்ம தப்அஸு இபாதக' (இறைவா! உனது அடியார்களை எழுப்பும் (மறுமை) நாளில் என்னை உனது தண்டனையில் இருந்து பாதுகாத்திடுவாயாக!) என்று கூறுவார்கள். மேலும் 'பிஸ்மிகல்லாஹும்ம அமூது வஅஹ்யா' (இறைவா! உன் பெயர் கொண்டே உறங்குகின்றேன். மேலும் உன்பெயர் கொண்டே விழிக்கிறேன்) என்றும் கூறுவார்கள்.

மேலும் வலது பக்கமாக உறங்கி, "அல்லாஹும்ம! அஸ்லம்த்து நஃப்ஸீ இலைக்க, வஃபவ்வள்த்து அம்ரீ இலைக்க வவஜ்ஜஹ்த்து வஜ்ஹீ இலைக்க, வஅல்ஜஃத்து ழஹ்ரீ இலைக்க, ர(g)க்பதன் வரஹ்பதன் இலைக்க. லா மல்ஜஅ வலா மன்ஜா மின்க்க இல்லா இலைக்க, ஆமன்த்து பிகித்தாபிக்கல்லதீ அன்ஸல்த்தஹ், வபி நபிய்யிக் கல்லதீ அர்ஸல்த்தஹ்" (இறைவா! என்னை நான் உன்னிடம் ஒப்படைத்தேன். என் காரியங்கள் அனைத்தையும் உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன். என் முகத்தை உன்னளவில் திருப்பிவிட்டேன். எனது முதுகை உன்னளவில் சாய்த்துவிட்டேன். உன்மீதுள்ள

ஆர்வத்திலும் அச்சத்திலும்தான் (இவற்றை நான் செய்தேன்). உன்னிடமிருந்து தப்பிக்கவும் ஒதுங்கிடவும் உன்னைத் தவிர வேறு போக்கிடம் இல்லை. நீ அருளிய உன்னுடைய வேதத்தையும் நீ அனுப்பிய உனது நபியையும் நான் நம்பினேன்.) என்று கூறுவதுடன், ''ஒருவர் (இவ்வாறு பிரார்த்தித்து விட்டு உறங்கும்போது) இறந்துவிட்டால் (இஸ்லாம் எனும்) இயற்கை மரபில் இறந்தவராவார்'' என்றும் கூறினார்கள்.

மேலும் பின்வரும் துஆவையும் கூறுவார்கள்: ''அல்லாஹும்ம ஃகலக்த நப்ஸீ, வஅந்த தவப்¬ஃபாஹா, லக மமாதுஹா வமஹ்யாஹா, இன் அஹ்யைதஹா ஃபஹ்ஃபள்ஹா, வஇன் அமத்தஹா ஃபஃக்பிர் லஹா, அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் ஆஃபியா''. (இறைவா! நீயே என் ஆத்மாவைப் படைத்தாய். நீயே அதனைக் கைப்பற்றுகிறாய். அதன் மரணமும், வாழ்வும் உனக்குரியது. நீ அதை உயிர் வாழச் செய்தால் அதனைக் காத்தருள். அதை நீ மரணிக்கச் செய்தால் அதை மன்னித்து விடு! இறைவா! உன்னிடம் மன்னிப்பை வேண்டுகிறேன்).

ஸூரா ஸஜ்தா (32ம் அத்தியாயம்), மற்றும் ஸூரா முல்க் (67ம் அத்தியாயம்) ஆகிய அத்தியாயங்களை ஓதாமல் நபியவர்கள் தூங்க மாட்டார்கள். மேலும் ஆயதுல் குர்ஸீ (ஸூரா பகராவின் 255ம் வசனம்), ஸூரா பகராவின் இறுதி இரு வசனங்களையும் ஓதும்படி பணித்துள்ளார்கள்.

மேலும் பின்வரும் துஆக்களையும் ஓதுமாறு பணித்துள்ளார்கள்:

பிஸ்மிக ரப்பீ வழஃத்து ஜன்பீ, வபிக அர்ஃபஉஹு, இன் அம்ஸக்த்த நஃப்ஸீ ஃபர்ஹம்ஹா. வஇன் அர்ஸல்த்தஹா ஃபஹ்ஃபழ்ஹா பிமா தஹ்ஃபழு பிஹீ இபாதக்கஸ் ஸாலிஹீன்" என்று கூறுவீராக. (என் இரட்சகனே! உன் பெயரால் என் விலாவை (தரையில்) வைத்தேன். உன் உதவியாலேயே (மீண்டும்) எழுவேன். என் உயிரை நீ கைப் பற்றிக்கொண்டால், அதற்குக் கருணை காட்டுவாயாக! அதை நீ (உன் வசம் வைத்துக் கொள்ளாமல்) விட்டுவிட்டால், உன் நல்லடியார்களை எதன் மூலம் பாதுகாப்பாயோ அதன் மூலம் என் உயிரையும் காத்திடுவாயாக!)

'அல்லாஹும்ம ஆலிமல் ஃகைபி வஷ்ஷஹாததி, பாதிரஸ் ஸமாவாத்தி வல் அர்ளி, ரப்ப குல்லி ஷைஇன் வமலீகஹு, அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லா அன்த, அஊது பிக மின் ஷர்ரி நப்ஸீ வமின் ஷர்ரிஷ் ஷைத்தானி வஷிர்கிஹி'. (இறைவா! மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிபவனே! வானங்களையும், பூமியையும் படைத்தவனே! அனைத்துப் பொருட்களின் அதிபதியே! அரசனே! வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர யாருமில்லை. எனது மனோ இச்சையின் தீங்கை விட்டும் ஷைத்தானின் தீங்கு, மற்றும் அவனது ஷிர்க்கை விட்டும், உன்னிடமே பாதுகாப்புத் தேடுகிறேன்).

இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களின் மீதும்

இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ கருணைபுரிந்ததைப்போல் முஹம்மத்(ஸல்) அவர்களின் மீதும் முஹம்மத் (ஸல்) அவர்களின் குடும்பத்தார், மனைவியர், சந்ததியினர் மீதும் கருணை புரிந்திடு. நீயே புகழுக்குரியவனும், கண்ணியமிக்கவனும் ஆவாய். இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களின் மீதும் இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ உன் அருள் வளத்தைப் பொழிந்தைப் போல் முஹம்மத் (ஸல்) அவர்களின் மீதும் முஹம்மத் (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மனைவியர், சந்ததியினர் மீதும் உன் அருள் வளத்தைப் பொழிந்திடு, நீயே புகழுக்குரியவனும், கண்ணியமிக்கவனும் ஆவாய்.

இறைவா! இவ்வுலகில் எமது தோழர் முஹம்மத் (ஸல்) அவர்களை நேரில் கண்டு, உடனிருந்து, தோழராகும் பாக்கியத்தை நாம் இழந்ததைப் போன்று மறுமையில் அதனை எமக்கு இழக்கச் செய்து விடாதே!. சுவனத்தில் நபிக்கு அருகில் இருக்கவும், அன்னாரைப் பார்த்துப் பேசவும் எமக்கு சந்தர்ப்பம் அளிப்பாயாக!. இதற்குப் பின்னால் ஒரு நாளும் தாகமேற்படாதளவு அன்னாரின் புனித கரங்களால் மறுமையில் நீர் தடாகத்திலிருந்து நீர் பருக வாய்ப்பளிப்பாயாக!. கொடையாளனே எமக்கு அன்னாரின் பரிந்துரை கிடைக்கச் செய்வாயாக!.

இறைவா! சிறிய, பெரிய அனைத்து விடயங்களிலும் அன்னாருடைய ஸுன்னாவுடன் இருந்து, அன்னாரைப் பின்பற்றும் வாய்ப்பளிப்பாயாக. அன்னாரையும், அவர்களது வழிமுறையையும் எமக்கு எம்மை விடவும்,

எமது பெற்றோர், பிள்ளைகள் அனைவரையும் விடவும் நேசத்திற்குரியதாக ஆக்கி வைப்பாயாக.

இறைவா! எம் சார்பாக அன்னாருக்கு சிறந்த, பரிபூரணமான கூலியை வழங்கிடுவாயாக!. ஒரு நபிக்கு அவரது சமூகம் சார்பாக நீ கொடுக்கும் அதி சிறந்த கூலியை அன்னாருக்குக் கொடுத்திடுவாயாக! அவர்களுக்கு (சொர்க்கத்தின் மிக உயர்ந்த பதவியான) வஸீலா எனும் பதவியினையும், சிறப்பையும் வழங்குவாயாக! நீ அவர்களுக்காக வாக்களித்த புகழப்பட்ட இடத்தில் அவர்களை எழுப்புவாயாக! நிச்சயமாக நீ வாக்குமீறக் கூடியவனல்ல.

IslamHouse.com

@IslamHouseta Tamil.IslamHouse islamhouse.com/ta/

IslamHouseTamil

For more details visit
www.GuideToIslam.com

GUIDE TO ISLAM

contact us :Books@guidetoislam.com

GuidetoIslam.org Guidetoislam1 Guidetoislam www.Guidetoislam.com

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة

هاتف: ٩٦٦١١٤٤٥٤٩٠٠+ فاكس: ٩٦٦١١٤٩٧٠١٢٦+ ص ب: ٢٩٤٦٥ الرياض: ١١٤٥٧

P.O.BOX 29465 RIYADH 11457 TEL: +966 11 4454900 FAX: +966 11 4970126

OFFICERABWAH




International Organization for Standardization ISO 9001

osoulcenter

www.osoulcenter.com

**To Download This Book, please Visit:**

OSOUL STORE osoulstore.com